www.samarasam.net

# சமரசம்

மாதம் இருமுறை இதழ்
16-31 மார்ச் 2023 ₹25

**வெறுப்பு வணிகர்களின் வதந்தி அரசியல்**

**எடப்பாடி பாஜக உறவை முறிப்பாரா?**

**பிபிசி ஆவணப்படம்**
**- ஒரு விமர்சனப் பார்வை**

# அஸ்ஸாம்


## நிரம்பி வழியும் சிறைச்சாலைகள்




**ரமளான் சிறப்புப் பக்கங்கள்**

- மனிதநேயப் புரட்சி ரமளான்
- ரமளான் நமக்குப் பயனளிக்கட்டும்
- சுவர் வரைந்த சித்திரங்கள்
- நாமும் ரமளானும்
- மாண்புயர் மாதம்
- அருள்வளங்களின் மாதம்


# IFTயின் புதிய வெளியீடுகள்...










முதுபெரும் எழுத்தாளர்

**கே. முஹம்மது தாஜுத்தீன்**

அவர்கள் எழுதிய

**மதீனாவில் மாநபி**

நிகழ்வுகளும் படிப்பினைகளும்

(பாகம் - 1) **900+** பக்கங்கள்

**மதீனாவில் மாநபி**

நிகழ்வுகளும் படிப்பினைகளும்

(பாகம் - 2) **900+** பக்கங்கள்

**மக்காவில் மாநபி**

நிகழ்வுகளும் படிப்பினைகளும்

**900+** பக்கங்கள்

விரைவில்...

8668057596 www.iftchennai.in



## உள்ளே...


7 வெறுப்பு வணிகர்களின் வதந்தி அரசியல் - தலையங்கம்

8 நாமும் ரமளானும் - S.T. முஹம்மது ரபீக்

10 எடப்பாடி பாஜக உறவை முறிப்பாரா? - சேயன் இப்ராகிம்

16 ரமளான் நமக்குப் பயனளிக்கட்டும் - அஷ்ஷெய்க் A.C. அகார் முஹம்மது

20 அஸ்ஸாம் : நிரம்பி வழியும் சிறைச்சாலைகள்..! - கப்ளிசேட்

32 பிபிசி ஆவணப்படம்: ஒரு விமர்சனப் பார்வை - நாகூர் ரிஸ்வான்

36 சுவர் வரைந்த சித்திரங்கள்..! - டாக்டர் முஹயித்தீன் காஜி

40 அன்னை ஆயிஷா(ரலி) தூய்மையானவர் - மௌலவி முஹம்மது சித்தீக் மதனி

43 அமானிதம்: சமூகங்களை வலுப்படுத்தும் காரணி - ரஹ்மத் நிஷானா

46 அல்குர்ஆனை அணுக ஓர் அழகிய வழிகாட்டி - K.ஜலாலுத்தீன்

48 சிறார் உலகம்: மாண்புயர் மாதம் - பருத்தி இக்பால்

50 வழிகாட்டுகிறார் ஜவ்ஹரா மெஹர் - குளச்சல் ஆசிம்

● கடிதங்கள் ● திசை ● குர்ஆன் ● ஹதீஸ்



ஆசிரியர் - வெளியிடுபவர் : **H.அப்துர் ரகீப்**

பொறுப்பாசிரியர் : **வி.எஸ். முஹம்மத் அமீன்**

இதழ் வடிவமைப்பு : **M. முஹம்மது அபூபக்கர்**

*படைப்புகளை அனுப்ப :*

**samarasam.article@gmail.com**

*விளம்பரத் தொடர்புக்கு :*

**M.அப்துல் காதர் 95661 53142**

*விளம்பரங்களை அனுப்ப :*

**samarasam.advt@gmail.com**

சந்தா - விநியோகப் பிரிவு :

**044 - 2662 0091**

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு | : | ரூ.550 |
| அரையாண்டு | : | ரூ.280 |
| வெளிநாடு (ஓர் ஆண்டு) | : | ரூ.3500 |

பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்: Creative Communication Chennai எனும் பெயருக்கே அனுப்ப வேண்டும்.

*கடிதங்கள், படைப்புகள் அனுப்ப வேண்டிய முகவரி:*

பொறுப்பாசிரியர்,
சமரசம்,
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை 12
● 044-2662 0091
● samarasam.article@gmail.com
● www.samarasam.net

## நேர்த்தியான தொகுப்பு

நாட்டை ஒன்றிணைக்கும் நடைப்பயணம் நன்மை தரும். மக்கள் மனங்களில் மாற்றம் வரும். காங்கிரஸ் கட்சியும் நாட்டின் நலன் கருதி விட்டுக் கொடுத்து மற்ற கட்சிகளை அரவணைக்க வேண்டும்.

மோடியைத் துரத்தும் குஜராத் கோப்புகள். உண்மையைச் சொன்னால் உள்ளம் வலிக்கும். காலம் அந்த வலியை உலகிற்கு உணர்த்தும்.

விமர்சன ஒழுங்குகள் மிகவும் நேர்த்தியான தொகுப்பு. நாம் எதனையும் முன் பின் யோசிப்பதில்லை என்பதை உணர்த்துவதோடு சிந்தனைக்குச் சிறந்த துளிகளாக உள்ளன. குழந்தைகளை வாசிக்கத் தூண்டும் வகையில் வித்தியாசமான முறையில் புத்தக மதிப்புரைகள் அருமை.

– சாந்த் உஸ்மானி, சென்னை

## அவர்கள் எதையும் செய்வார்கள்

ராகுல் காந்தியின் நடைப்பயணம் பாஜகவை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இது போன்ற புதிய முயற்சிகள் காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமின்றி மக்களுக்கும் உத்வேகத்தை அளிக்கும். காங்கிரஸ் இன்னும் பல தியாகங்கள் செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் அதிகாரத்தில் உள்ளவர்கள் காங்கிரஸ் கட்சி மேலே வருவதைத் தடுப்பதற்கு எதையும் செய்வார்கள்.

– எம்.முஹம்மது கடாஃபி,
கொடிக்கால்பாளையம்

## ஜனநாயக அரசின் கடமை

இதழின் கடைசிப் பக்கம் இனிய பத்திகளோடு முடிவடைவது சிறப்பு. ஒரு ஜனநாயக அரசின் கடமை இதுதான் என கனடா பிரதமர் குறிப்பிட்டுள்ளவற்றை மற்ற நாடுகள் பின்பற்றலாம். வெறுப்புச் சந்தையில் யாரும் நிரந்தரமாக இருப்புக் கொள்ள முடியாது. நிச்சயம் பயணம் பயனளிக்கும்.

– ப.பீர் இலாஹி, உத்தமபாளையம்

## வஞ்சகமும் அரவணைப்பும்

பறவைகள் குறித்த புதுமையான தகவல்களை அறிய முடிந்தது. பறவைகள் தரும் செய்திகள் கட்டுரையை எழுதிய உம்மு ஈஸாவிற்கு நன்றி. முகலாய மன்னர்களின் நினைவுச் சின்னங்களை ஆட்சியில் இருக்கும் பாஜக கொஞ்சம் கொஞ்சமாக அழித்து வரும் நிலையில் துபாயில் ஹிந்த் சிட்டி போன்ற முன்னெடுப்புகள் மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

– லைலாம்மா, தேனி

## நீதித்துறை சீர்திருத்தப்பட வேண்டும்

நீதித்துறை ஜனநாயகத்தின் ஒரு தூண். ஆனால் அண்மைக்காலமாக நீதித்துறை கரையான் தின்ற மூங்கில்போல் ஆகிவிட்டது. நீதித்துறையை சீர்த்திருத்தம் செய்ய வேண்டியுள்ளது.

– அருணகிரி, ஆலாம்பாளையம்

## அர்த்தம் தெளியச் செய்த கட்டுரை

புகையிலை, மது போன்ற விஷயங்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்காதிருப்பதன் மூலம்




## கை கொடுக்கும் யாத்திரை

முரளி மனோகர், அத்வானி போன்றோர் நடைப்பயணத்தின் வழியாகவே பாஜகவை வளர்த்தனர். காங்கிரஸ் சார்பாக நடத்தப்பட்ட ராகுலின் பாரத் ஜோடோ யாத்திரை நிச்சயம் தாக்கத்தை ஏற்படுத்தும். வருகின்ற 2024 தேர்தலில் காங்கிரஸுக்கு இந்த யாத்திரை கை கொடுக்கும்.

– ரவி அரசி, ஆலாம்பாளையம்

நீதித்துறை தனக்குத்தானே அநீதியிழைத்துக் கொள்கிறது. திசை தொடர்ந்து நல்ல பல வழிகாட்டுதல்களை வழங்குகிறது. விமர்சன ஒழுங்குகள் மிகவும் எதார்த்தமானதாகவும் நேர்த்தியானதாகவும் இருந்தது. வாழ்வின் அர்த்தம் தெளிவோம் கட்டுரை அருமை. கனடா நாட்டு பிரதமரின் நடவடிக்கை பாராட்டுக் குரியது.

**-ப.குருசாமி, தேனி**

## பாராட்டுக்குரிய முன்னெடுப்பு

கனடாவில் அதிகரித்து வரும் இஸ்லாமிய வெறுப்புக்கு எதிராக அந்நாட்டின் பிரதமர் இஸ்லாமோஃபோபியாவிற்கு எதிராக சிறப்பு ஆலோசகரை நியமித்திருப்பது பாராட்டுக்குரியது. இது போன்ற தகவல்களைத் தொடர்ந்து வழங்கும் குளச்சல் ஆசிம் அவர்களுக்கு நன்றி.

**-பரிதா, தேனி**

## வாசிக்க வேண்டிய கட்டுரை

சமரசத்தின் கருத்துகள் எப்போதும் செறிவு மிக்கதாகவே உள்ளது. அப்பாஸ் அல் ஆஸாதி எழுதிய விமர்சன ஒழுங்குகள் அனைவரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய கட்டுரை.

**-பத்மாவதி, பவானி**

## விதை தூவும் பறவைகள்

பறவைகள் சிறந்த சமூக சேவகர்கள். தம் எச்சங்களின் மூலம் பலநூறு மரங்களுக்கு விதை தூவுகிறது. பறவைகள் தரும் செய்திகள் கட்டுரை அருமை. கட்டுரையாளருக்கு பாராட்டும் நன்றியும்!

**-கௌரி சங்கர் கிருத்திகா, கமுதி**

## பிரார்த்திப்போம்!

நமது வாழ்க்கை இறைவனின் நாட்டப் படிதான் நடக்கும். இவ்வாழ்க்கையில் இறை வனின் உதவி வேண்டுமென்றால் நிச்சயமாக பிரார்த்தனை இன்றியமையாதது என M.A. ஸலாமி எழுதியது சிறப்பு.

**-அஜிதா, தேனி**

## உண்மையை உணர்ந்த மக்கள்

மோடியைத் துரத்தும் குஜராத் கோப்புகள் கட்டுரை விவரமாகவும் தெளிவாகவும் இருந் தது. பிபிசியின் ஆவணப்படத்தின் மூலம் மக்கள் உண்மையை உணர்ந்துள்ளனர்.

அஷ்ஷெய்க் அகார் முஹம்மது எழுதிய வாழ்வின் அர்த்தம் தெளிவோம் கட்டுரை எஞ்சியுள்ள வாழ்வை எப்படி அர்த்தமுள்ள வகையில் பயன்படுத்துவது என்பது குறித்து தெளிவுபடுத்தியது.

**- எம்.ஏ.ஜமாலுத்தீன், கிளியனூர்**

## அரசின் கோர முகம்

தலையங்கம் நம் நாட்டு நலனில் அக்கறை இல்லாத அரசின் கோர முகத்தைக் காட்சிப்படுத்தியுள்ளது. கடைசிப் பக்கம் செய்தியைப் போன்று இந்தியாவிலும் நடக்க வேண்டும். ஆனால் ஃபாசிஸம் ஆட்சியில் உள்ளவரை அப்படி நடக்க வாய்ப்பில்லை.

விமர்சன ஒழுங்குகள் கட்டுரை நல்ல தொரு விமர்சன வழிமுறைகளையும் படிப் பினைகளையும் படம்பிடித்துக் காட்டியுள்ளது. ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பொருளா தார நிலைப்பாடு சமூகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டால் எளிய மக்களுக்கு அது ஒரு பொற்காலம். சமரத்தின் அனைத்து ஆக்கங் களும் அருமை.

**-முஹம்மது ஷிஹாப், கடையநல்லூர்**

## தியாகத்தைப் பறைசாற்றும் பவள விழா

75 உறுப்பினர்களுடன் ஆரம்பித்த இயக் கம் இன்று 75ஆவது ஆண்டில்! இஸ்லாத் தைத் தூய வடிவில் அறிய வைத்து, தீன் இன்றி அமையாது உலகு என்றுரைத்து, நெருக்கடி நெருப்பாற்றில் நீந்திய போர்க்கப்பலாய், ஊழிக் காற்றுக்குச் சாய்ந்து போகாத ஆணிவேராய், புகழ்ச்சி சுழலில் சிக்காத நிறைகுடமாய், இலக்கை நோக்கி இலகுவாய் நகர்கிறது இந்தத் தியாகப் பரம்பரை. பவள விழா காணும் ஜமாஅத்தே இஸ்லாமி ஹிந்தின் பணிகள் சிறக்கட்டும்!

**-அப்துல் சத்தார், நீலகிரி**



திசை

## மனிதநேயப் புரட்சி

# ரமளான்

*ரமளான் நோன்பு மனிதர்களின் வயிற்றுச் சமத்துவத்திற்காக ஷரீஅத் விதித்த கட்டாய ஏழ்மையாகும். மில்லியன் டாலர் சொந்தக்காரராயினும் சரி, அன்றாடங்காய்ச்சியும் சரி, அதுவுமில்லாதவரும் சரி இந்தக் கடமையின் மூலம் சமமாய் நிற்கின்றனர். இது இஸ்லாத்தின் தனிப்பெரும் அழகாகும்.*

*தனிமனிதத் தற்பெருமைகள் யாவும் களையப்பட்டு தொழுகையில் ஓரணியில் நிற்பதுபோல, சமூக அந்தஸ்து பற்றிய பார்வைகள் யாவும் பலி கொடுக்கப்பட்டு தைக்காத ஆடையுடன் ஹஜ்ஜில் அனைவரும் சங்கமிப்பதுபோல இங்கும் நோன்பின் மூலம் ஒரு சமத்துவம் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.*

*மனிதர்கள் உணர்வுப்பூர்வமாக சமத்துவத்தை அனுபவிப்பதற்கான ஒரு கட்டாய வறுமை ஏற்பாடே இந்த நோன்பு. மனிதர்கள் வெவ்வேறு வித்தியாசமான நிலைகளில் இருக்கும் போது அந்தப் பாடம் சாத்தியமின்றி விடுகின்றது. அதனால் தான் அனைவரது உணர்வுகளும் ஒன்றாக மாற்றப்பட்டு இந்தப் பாடம் கற்பிக்கப்படுகிறது.*

**– முஸ்தஃபா ஸாதிக் அர்ராஃபிஈ(ரஹ்)**

வஹ்யுல் கலம் நூலிலிருந்து...

சரம் : 43
மலர் : 19

وَقُولُوا قَوْلًا سَدِيدًا

சொல்வதைத் தெளிவாக - நேரடியாகச் சொல்லுங்கள்

ஹிஜ்ரி 1444 ஷஅபான் 23 - ரமளான் 8 ● 2023 மார்ச் 16 - 31

# வெறுப்பு வணிகர்களின் வதந்தி அரசியல்

*ஒரிசா, பீகார், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர், மேற்கு வங்கம், உ.பி, இராஜஸ்தான் போன்ற வட மாநிலங்களிலிருந்து இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் சாலை, கட்டடம், ஜவுளி, உணவகங்கள் போன்ற பல்வேறு பணிகளுக்காகத் தமிழ்நாட்டிற்கு இடம்பெயர்ந்து வந்துள்ளார்கள்.*

*அதுபோல வடமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்து வணிக முதலாளிகளாகக் காலூன்றியவர்கள் கணிசமான அளவில் இருக்கின்றார்கள். மறுபுறம் இரயில்வே, வங்கிகள், தபால் துறை, தொலை தொடர்புத்துறை போன்ற மத்திய அரசுத் துறைகளிலும் வடமாநிலத்தவர்கள் இங்கு ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். ஆனால் வடமாநிலத் தொழிலாளர்கள் விவகாரம் மட்டுமே இங்கு ஊதிப் பெரிதாக்கப்படுகிறது.*

*வடமாநிலத்தவர்கள் தங்களுக்கான வேலைகளைப் பறித்துக் கொள்வதாகவும், இவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும், இவர்களால் ஹிந்தி மொழியின் தாக்கம் அதிகரிப்பதாகவும், விட்டால் இவர்கள் இங்குள்ள வாக்காளர்களாகி விடுவார்கள் என்றெல்லாம் வடமாநிலத் தொழிலாளர்கள் குறித்து செய்திகளாகவும், கேலி வீடியோக்களாகவும் அண்மைக்காலமாக வலைதளங்களில் பதிவுகள் அதிகரித்து வரும் நிலையில் திருப்பூரில் வடமாநிலத் தொழிலாளர்கள் தமிழர்களை விரட்டியடித்ததாக சமூக ஊடகங்களில் ஒரு காணொளி வைரலானது. ஆனால் அது தேநீர் கடையில் நடந்த சாதாரண தகராறு என்று திருப்பூர் மாநகர காவல் ஆணையர் விளக்கமளித்தார்.*

*ஹிந்தி பேசியதற்காக 12 வடமாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் படுகொலை செய்யப்பட்டதாகவும், 15 தொழிலாளர்கள் தூக்கிலிட்டு கொல்லப்பட்டதாகவும் உத்தரப் பிரதேச பாஜக செய்தித் தொடர்பாளர் உமாராவ் கடந்த வாரம் டுவிட்டரில் பதிவிட அந்தச் செய்தியை டைனிக் பாஸ்கர் இந்தி நாளிதழ் வெளியிட விவகாரம் பற்றிக்கொண்டது.*

*இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கும்படி பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் ட்வீட் செய்திருந்தார். பீகார் சட்டப் பேரவையில் பாஜக இந்த விவகாரத்தை எழுப்பியபோது அம்மாநில துணைமுதல்வர் தேஜஸ்வி, இந்தப் பொய்ச்செய்தி திட்டமிட்டு பரப்பப்படுவதாக தமிழ்நாடு காவல்துறை தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிட்ட விளக்கங்களைப் பதிவு செய்து பாஜகவின் வதந்தி அரசியலைத் தோலுரித்துக் காட்டினார். பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமாரை அலைப்பேசியில் தொடர்புகொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் பேசியதுடன் வடமாநிலத் தொழிலாளர்களின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து கடிதமும் எழுதியுள்ளார். அக்கடிதத்தை நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் டி.ஆர். பாலு நிதிஷ்குமாரிடம் வழங்கினார்.*

*வதந்தியை பரப்பிய பீகாரைச் சார்ந்த சிபிஎல் மீடியா ரூபேஷ்குமார், அமன் குமார் கைது செய்யப்பட்டதுடன் தன்வீர் போஸ்ட்டின் தன்வீர் உள்ளிட்ட பலர் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. உ.பி பாஜக செய்தித் தொடர்பாளர் பிரசாந்த் உமாராவ் மீது தூத்துக்குடி போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இவ்விவகாரத்தில் வன்முறையைத் தூண்டும் விதமாக அறிக்கை வெளியிட்ட தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை மீது நான்கு பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*தங்களின் சுய அரசியல் இலாபங்களுக்காக பொய், வெறுப்பு, துவேஷம், வன்மம் கொண்டலையும் பாஜக இப்போது வதந்தி அரசியலையும் கையிலெடுத்துள்ளது. வதந்தி பரப்பியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். வடமாநிலத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைவரும் வகுப்புவாதிகளின் உண்மை முகத்தை உற்றுநோக்கி விழித்துக் கொள்ள வேண்டிய தருணமாக இதை எடுத்துக் கொள்ள வேண்டும்.*



# நாமும் ரமளானும்

**– S.T. முஹம்மது ரபீக்**

ரமளான் மாதத்தில் நோன்பு ஏன் கடமையாக்கப்பட்டது? ரமளான் மாதத்தில் நம்முடைய வாழ்க்கையை எவ்வாறு சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டும்? இறையச்சத்தை வளர்த்துக் கொள்வது எப்படி? திருக்குர்ஆனோடு தொடர்பை அதிகரித்துக் கொள்வது எப்படி? ரமளான் மாதம் முழுக்க முழுக்க நன்மையின்பால் நம்மைத் திருப்பிக் கொள்வது எப்படி? இந்த வினாக்களுக்கான விடை தேடும் மாதமாக இந்த ரமளானை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். நம்மால் இயன்ற அளவுக்கு நன்மையான காரியங்களில் ஈடுபட முயல வேண்டும்.

‘இறைநம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் இருந்த (நபிமார்களைப் பின்பற்றிய)வர்கள் மீது கடமையாக்கப்பட்டது போல், உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டிருக்கிறது. (அதன் மூலம்) நீங்கள் இறையச்சமுள்ளவர்களாய்த் திகழக்கூடும்’. (திருக்குர்ஆன் 2:183)

## நோன்பு எதற்கு ?

‘ரமளான் மாதம் எத்தகையதென்றால், அம்மாதத்தில்தான் மனிதர்களுக்கு (முழுமையான) வழிகாட்டியாகவும், மேலும் நேர்வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக்கூடியதுமான குர்ஆன் இறக்கியருளப் பட்டது. எனவே இனி உங்களில் எவர் அம்மாதத்தை அடைகிறாரோ, அவர் அம் மாதம் முழுவதும் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் எவரேனும் நோயாளியாகவோ, பயணத்திலோ இருந்தால், அவர் மற்ற நாள்களில் கணக்கிட்டு நோன்பு நோற்றிட வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு இலகுவை விரும்புகின்றான். அவன் உங்களுக்குக் கஷ்டத்தைத் தர விரும்பவில்லை. (நோன்பின்) எண்ணிக்கையை நீங்கள் நிறைவு செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களை நேரிய வழியில் செலுத்தியதற்காக நீங்கள் அவனுடைய மேன்மையைப் போற்றி அவனுக்கு நன்றி பாராட்டுவதற்காகவுமே இவ்வழி உங்களுக்குக் காண்பிக்கப்படுகிறது!’ (திருக் குர்ஆன் 2:185)

நோன்பு வணக்க வழிபாட்டிற்காகவும், இறையச்சமிக்க நடத்தையை மேற்கொள்வதற்கான பயிற்சியாகவும் மட்டும் அறிவிக்கப் படவில்லை. அதற்கும் மேலாக திருக்குர்ஆன் எனும் வாழ்க்கை வழிகாட்டியை இந்த மாதத்தில்தான் இறைவன் அருளினான். ஆகவேதான் இந்த அருள்வளத்திற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் செயலாகவும் நோன்பு அமைகிறது. இந்த எண்ணத்துடன் நோன்பு நோற்கும் போதுதான் நோன்பு கடமையாக்கப்பட்டதன் நோக்கமும் நிறைவேறுகிறது.

## நோன்பின் சிறப்பு

அபூஹுரைரா(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ‘ரமளான் மாதம் வந்து விட்டால் சொர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான் விலங்கிடப்படுகின்றான்’ என்று அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரி)

**திருக்குர்ஆன் எனும் வாழ்க்கை வழிகாட்டியை இந்த மாதத்தில்தான் இறைவன் அருளினான். ஆகவேதான் இந்த அருள்வளத்திற்காக இறைவனுக்கு நன்றி செலுத்தும் செயலாகவும் நோன்பு அமைகிறது.**

‘சொர்க்கத்தில் ரய்யான் என்று அழைக்கப்படும் ஒரு வாயில் இருக்கின்றது. மறுமை நாளில் அதன் வழியாக நோன்பாளிகள் நுழைவார்கள். அவர்களைத் தவிர வேறு யாரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். நோன்பாளிகள் எங்கே? என்று கேட்கப்படும். உடனே அவர்கள் எழுவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ் வாயில் அடைக்கப்பட்டுவிடும்’ என்று அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அறிவிப்பவர்: ஸஹ்ல்(ரலி) நூல்: புகாரி, முஸ்லிம்)

## குறைந்தபட்ச திட்டங்கள்:

ரமளான் நோன்பைச் சரியான முறையில் நோற்று அதன் நன்மைகளை இறைவனிடத்தில் முழுமையாகப் பெற வேண்டும்.

- இரவு நேரத் தொழுகைகளைப் பேணுதலாகத் தொழ வேண்டும்.
- ஒருமுறையாவது திருக்குர்ஆனை ஓதி முடிக்க முயற்சி செய்வோம்.
- திருக்குர்ஆனை அதிகம் அதிகம் ஓதுவோம். திருக்குர்ஆன் தமிழாக்கம் படிப்போம்.
- இறைதியானம் பிரார்த்தனையில் அதிகமாக ஈடுபடுவோம்.
- இறுதிப் பத்து நாள்களில் ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த இரவைத் தேட பாடுபடுவோம்.
- அதிகம் அதிகம் தர்மம் செய்ய முயற்சி செய்வோம்.
- பொய்யான, அருவெறுக்கத்தக்க செயல்களிலிருந்து விலகி வாழ்வோம்.
- மனிதகுல அமைதிக்காக பிரார்த்தனை செய்வோம்.

நோன்பு அருள்வளங்களின் மாதமாக, பாவமன்னிப்பின் மாதமாக, கருணையின் மாதமாக, ஈடேற்றம் பெறுகின்ற மாதமாக, நன்மைகளின் மாதமாக ஒளிர்கிறது. அல்லாஹ் நமக்குப் புனித ரமளானின் சிறப்புமிகு நாள்களின் நற்செயல்களை முறையாக நிறைவேற்றவும், நமது பிரார்த்தனைகளை ஏற்று அருள் புரியவும், பாவமன்னிப்பு அளிக்கவும், நம் அனைவரையும் நரகில் இருந்து பாதுகாக்கவும், புனித ரமளானின் நோன்புகளை ஏற்று அனைத்து நன்மைகளையும் முழுமையாக வழங்கவும் அருள்புரிவானாக! ச


**Press & Registration of Books Act Registration of Newspaper (Chennai) Rules 1956 Form IV (See Rule 8) Statements About Ownership & other Particulars about News Paper.**

| | | |
|---|---|---|
| Place of Publication | : | 138, Perambur High Road Chennai -12 |
| Periodicityof Its publication | : | Fortnightly |
| Printer's Name | : | S. Rajan |
| Nationality | : | Indian |
| Address | : | Bharani Offset Printers, 77, Venkatathri Street, Kosapet, Chennai - 12. |
| Publisher's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Editor's Name | : | H. Abdur Raqeeb |
| Nationality | : | Indian |
| Address | : | 138, Perambur High Road, Chennai -12 |
| Owner's Name(s) | : | Creative Communication Chennai |
| a) Please State the Particulars of individuals or of the firm, joint stock company, Trust, Co-operative society or Association which owns the news paper | : | Trust - represented by its Chairman |

I, H. Abdur Raqeeb here by declare that the Particulars given are true to the best of my knowledge and belief.

Dated : 28-02-2023

(sd) **H. Abdur Raqeeb**
Signature of Publisher



# எடப்பாடி பாஜக உறவை முறிப்பாரா?

● **சேயன் இப்ராகிம்**

அதிமுக பொதுக்குழு தொடர்பாக ஓ.பன்னீர் செல்வம் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் 11.7.22 அன்று நடைபெற்ற பொதுக்குழு செல்லும் என்று தீர்ப்பளித்துள்ளது. இது எடப்பாடி பழனிச்சாமியின் கைகளை வலுப்படுத்தியிருப்பதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இந்தத் தீர்ப்பு எதிர்பார்த்ததுதான். பொதுக்குழு உறுப்பினர்களில் 90 விழுக்காடு உறுப்பினர்களின் ஆதரவையும், 66 சட்டமன்ற உறுப்பினர்களில் 62 பேரின் ஆதரவையும், 75 மாவட்டச் செயலாளர்களில் 70 பேரின் ஆதரவைப் பெற்றிருக்கும் அவருக்கு எதிராகத் தீர்ப்பு வருவதற்கு வாய்ப்பில்லை.

ஜெயலலிதா சிறைக்குச் சென்றபோது முதல்வராகப் பொறுப்பு வகித்த ஓ.பன்னீர் செல்வத்தின் கை வீழ்ந்துள்ளது. சசிகலா சிறைக்குப் போனபோது, முதல்வர் பொறுப்புக்கு வந்த எடப்பாடியின் கை ஓங்கியுள்ளது.

### எடப்பாடியின் எழுச்சி, பன்னீர் செல்வத்தின் வீழ்ச்சி

ஜெயலலிதா மரணமடைந்தவுடன் இரவோடு இரவாக முதல்வராகப் பொறுப்பேற்ற ஓ.பன்னீர் செல்வம், சசிகலாவின் நம்பிக்கையை இழந்த காரணத்தால் பதவி விலக வேண்டியதாயிற்று. அப்போது கூவத்தூரில் முகாமிட்டிருந்த அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கூடி சசிகலாவை சட்டமன்ற கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர் (அதாவது முதல்வராக).

ஆனால் சொத்துக் குவிப்பு வழக்கின் மீதான தீர்ப்பின் தேதியை அப்போது உச்சநீதிமன்றம் அறிவித்ததால் சசிகலாவுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்க ஆளுநர் காலதாமதம் செய்தார். உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்தது. சசிகலா நான்கு ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்றார். எனவே அவரது முதல்வர் கனவு கானல் நீராகிப் போனது. அடுத்து யார் முதல்வராக வருவார் என்ற கேள்வி எழுந்தபோது, செங்கோட்டையன்தான் அனைவரின் நினைவிற்கும் வந்தார்.

ஆனால் யாரும் எதிர்பாராத விதமாக சசிகலா, எடப்பாடி பழனிச்சாமியின் பெயரை முன்மொழிய அவர் அதிமுக சட்டமன்றக் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சசிகலா சிறைக்குச் சென்றார். எடப்பாடி முதல்வராகக் கோட்டைக்குச் சென்றார். அப்போது அவருக்கு டி.டி.வி.தினகரன் ஆதரவும் இருந்தது.

சசிகலாவால் பழிவாங்கப்பட்ட பன்னீர் செல்வம் ஜெயலலிதா சமாதியில் சில மணி நேரம் தியானம் செய்த பிறகு தான் தர்ம யுத்தம் தொடங்கப் போவதாக அறிவித்தார். அவருக்கு கே.பி.முனுசாமி, பாண்டியராஜன் உள்ளிட்ட 11 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். 2017ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் சட்டமன்றத்தில் எடப்பாடி அரசு நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்திய போது பன்னீர் செல்வம் அணியைச் சார்ந்த 11 சட்டமன்ற உறுப்பினர்களும் அதற்கு எதிராக வாக்களித்தனர். எனினும் நம்பிக்கை வாக்கெடுப்பில் எடப்பாடி வெற்றி பெற்றார்.

சில நாள்களிலேயே ஜெயலலிதா மரணம் காரணமாக ஏற்பட்ட காலியிடத்திற்கு சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் அதிமுக சார்பாக டி.டி.வி.தினகரன் நிறுத்தப்பட்டார். அவரது வெற்றிக்கு எடப்பாடி கடும் பரப்புரை மேற்கொண்டார். எனினும் தொகுதியில் அதிக அளவில் பணப் பட்டுவாடா நடைபெற்றதாகக் கூறி தேர்தல் ஆணையம் தேர்தலை இரத்துச் செய்தது.

இதற்குப் பின், விறுவிறுப்பான மாற்றங்கள் ஏற்பட்டன. பாஜக தலைவர்களின் கட்டப் பஞ்சாயத்தை ஏற்றுக்கொண்ட பன்னீர் செல்வம், ஜெயலலிதாவின் இறப்பிலுள்ள மர்மத்தைக் கண்டறிய ஒரு விசாரணைக் குழு அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க, அதனை எடப்பாடி ஏற்றுக் கொள்ள, அமைச்சரவையில் சேர்ந்தார். அவருக்குத் துணை முதல்வர் பதவி வழங்கப் பட்டது. கட்சியின் ஒருங்கிணைப்பாளராக பன்னீர் செல்வமும் இணை ஒருங்கிணைப் பாளராக எடப்பாடியும் நியமிக்கப்பட்டனர். பாஜக தலைவர்கள் குறிப்பாக மோடியின் ஆலோசனையின்படியே தான் எடப்பாடியுடன் சமரசம் செய்து கொண்டதாக பன்னீர் செல்வம் வெளிப்படையாகவே அறிவித்தார். எனினும் அன்றிலிருந்து பன்னீர் செல்வம் இரண்டாது நெடுஞ்செழியனாகி விட்டார். அவரது வீழ்ச்சியின் முதல் படி இதுவே.

தனது நிலை சற்று வலுப்பட்டதை அறிந்து கொண்ட எடப்பாடி, தந்திரமாகக் காய்களை நகர்த்தத் தொடங்கினார். டி.டி.வி கட்சியில் நீடித்தால் அவர் தனது முதல்வர் பதவிக்கு போட்டியாளராக உருவாகிவிடுவார் என நினைத்து, பன்னீர் செல்வம் துணையுடன் அவரைக் கட்சியிலிருந்து நீக்கினார். இரத்துச் செய்யப்பட்ட ஆர்.கே.நகர் தொகுதிக்கு மீண்டும் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது டி.டி.வி மீண்டும் போட்டியிட்டார். அவரை எதிர்த்து அவைத் தலைவர் மதுசூதனனை அதிமுக நிறுத்தியது.

இந்தத் தேர்தலில் இரட்டை இலைச் சின்னம் முடக்கப்பட்டது. எனினும் இடைத் தேர்தலில் டி.டி.வி பெரும் வெற்றி பெற்றார். அதிமுக தோல்வியுற்றது. (இந்தத் தேர்தலில் திமுக வைப்புத் தொகையை இழந்தது). எனினும் எடப்பாடி அசர

**பாஜக தலைவர்கள் குறிப்பாக மோடியின் ஆலோசனையின்படியே தான் எடப்பாடியுடன் சமரசம் செய்து கொண்டதாக பன்னீர்செல்வம் வெளிப்படையாகவே அறிவித்தார்.**



வில்லை. அடுத்த காயை நகர்த்தினார். சிறையிலிருந்த சசிகலாவை அதிமுகவின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து நீக்கி னார். அதிமுகவின் சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவரது காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றோமே என் பதைப் பற்றியெல்லாம் எடப்பாடி எண்ணிப் பார்க்கவில்லை. சசிகலாவின் காலில் விழுந்த அவர், அவரது காலை வாரி விடவும் தயங்கவில்லை. சிறையிலிருந்து வெளிவந்த பிறகு சசிகலா கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றி விடுவார் என எடப்பாடி அஞ்சி யதே அதற்குக் காரணம்.

இந்நிலையில் டி.டி.வி தனது ஆதரவு சட்டமன்ற உறுப்பினர்கள் 28 பேரை அழைத்துக் கொண்டு ஆளுநரைச் சந்தித்து எடப்பாடி பழனிச்சாமி மீது நம்பிக்கை இல்லை என்று மனுக் கொடுத்தார். உடனே செயலில் இறங்கினார் எடப்பாடி. கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் அந்த சட்ட மன்ற உறுப்பினர்களின் பதவியைப் பறிக்க சபாநாயகரிடம் மனு அளித்தார். அந்த உறுப்பினர்களின் பதவி பறிக்கப்பட்டது.

இதனை எதிர்த்து டி.டி.வி நடத்திய சட்டப் போராட்டங்கள் வெற்றியடையவில்லை. ஆனால் அதே நேரத்தில் நம்பிக்கை வாக் கெடுப்பின்போது எதிர்த்து வாக்களித்த பன்னீர் செல்வம் ஆதரவு 11 சட்டமன்ற உறுப்பினர்கள் மீது சபாநாயகர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்களது பதவியைப் பறிக்க வேண்டுமென்று நீதிமன்றம் சென்றது திமுக. ஆனால் நீதிபதியோ, இந்த விஷயத்தில் சபாநாயகர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அறிவுறுத்தியதோடு விஷயத்தை முடித்துக் கொண்டார். இதன்மூலம், சட்டமன்றத்தில் அதிமுகவின் பெரும்பான்மையை எடப்பாடி தக்க வைத்துக் கொண்டார்.

எடப்பாடி - பன்னீர் செல்வம் இரட்டைத் தலைமைக்கு அவ்வப்போது சிறு சிறு பிரச்னை ஏற்பட்டுக் கொண்டுதானிருந்தன. சட்டமன்றத் தேர்தல் நெருங்கியபோது அதிமுகவின் முதல்வர் வேட்பாளர் யார் என்ற கேள்வி எழுந்தது. பன்னீர் செல்வம் தன்னையே முதல்வர் வேட்பாளராக அறி விக்க வேண்டுமென விரும்பினார். ஆனால் எடப்பாடியே முதல்வர் வேட்பாளராக அறி விக்கப்பட்டார். பன்னீர் செல்வமும் அதனை ஏற்றுக்கொண்டார். சட்டமன்றத் தேர்தலுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பை இழந்த அதிமுக எதிர்வரிசையில் அமர்ந்தது. அப்போதும் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற கேள்வி எழுந்தது. பெரும்பான்மையான அதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் எடப்பாடிக்கு ஆதரவு தெரிவித்ததால் அவரே எதிர்க்கட்சித் தலைவரானார். பன்னீர் செல்வம் எதிர்க்கட்சித் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இப்படியாகத் தொடர்ந்து பன்னீருக்குப் பின்ன டைவு ஏற்பட்டுக் கொண்டே இருந்தது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடை பெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் அதிமுக இரண்டு உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வாய்ப்பிருந்தது. இந்த இருவரில் ஒருவர் தனது ஆதரவாளராக இருக்க வேண்டும் என வலியுறுத்திய பன்னீர் அதில் வெற்றியும் பெற் றார். அவரது ஆதரவாளரான இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த தர்மர் என்பவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இந்த நிகழ்வுக்குப் பிறகுதான் எடப்பாடி அடுத்த



**எடப்பாடி பழனிச்சாமி மட்டுமல்ல, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரும் மென்மையான இந்துத்துவப் போக்கைக் கொண்டிருந்ததை இப்போது சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.**

காயை நகர்த்தினார். அதிமுகவுக்கு ஒற்றைத் தலைமை வேண்டும் என தனது ஆதரவாளர் களை வைத்துப் பேசச் சொன்னார். இரு தரப்புக்கும் வாதப் பிரதிவாதங்கள் நிகழ்ந்தன.

23.6.22 அன்று நடைபெற்ற பொதுக் குழுவில் பன்னீர் செல்வம் தாக்கப்பட்டார். அந்தப் பொதுக்குழு ஒத்தி வைக்கப்பட்டு 11.7.22 அன்று அடுத்த பொதுக்குழு கூடும் என அறிவிக்கப்பட்டது. அந்தப் பொதுக் குழுவில்தான் பன்னீர் செல்வம் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பதவியிலிருந்தும், கட்சியிலிருந்தும் நீக்கப்பட்டார். எடப்பாடி தற்காலிகப் பொதுச் செயலாளர் ஆனார். அதற்குப் பின்னர், தொடர்ந்து சட்டப் போராட் டங்கள் நடைபெற்றன. உச்சநீதிமன்றம் 11.7.22 அன்று நடைபெற்ற பொதுக்குழு செல்லும் என தீர்ப்பளித்துள்ளது.

இனியும், சட்டப் போராட்டங்கள் நடக் கலாம். எனினும் கட்சியில் எடப்பாடி பழனிச்சாமியின் கை ஓங்கி விட்டதாகவே தெரிகின்றது. அவரது பின்னால் அதிமுக தொண்டர்கள் அணிவகுத்து நிற்கின்றனர் என்பதே உண்மை.

பன்னீர் செல்வம் கட்சியினரை நம்பாமல் நீதிமன்றங்களையே நாடுகின்றார். இது எந்த வகையிலும் அவருக்கு உதவப் போவ தில்லை. பாஜகவின் ஆலோசனைகளைக் கேட்டு நடந்ததால் அவருக்கு இந்த நிலை ஏற்பட்டதாக அவரது ஆதரவாளர்களே கூறு கின்றனர். அதிமுக ஒற்றைத் தலைமையை நோக்கி விரைவாக நகர்கிறது. இன்னும் சில நாள்களில் எடப்பாடி கட்சியின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்படலாம்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன் சில கட்சித் தலைவர்கள் எடப்பாடிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளனர். குறிப்பாக, அவருக்கு வாழ்த் துத் தெரிவித்துள்ள தொல்.திருமாவளவன், பாஜக கூட்டணியிலிருந்து அதிமுக வெளியேற வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளார்.

எடப்பாடி பதவிக்கு வந்ததிலிருந்தே அவர் பாஜகவின் ஊதுகுழலாகவே மாறிவிட்டார். நாடாளுமன்றத்திலும் மாநிலங்களவையிலும் பாஜக கொண்டு வந்த அனைத்து மக்கள் விரோத மசோதாக்களுக்கும் அதிமுக உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற முத்தலாக் தடை மசோதாவுக்கும் காஷ்மீர் மாநிலத்திற்கு 370ஆவது பிரிவின் கீழ் இந்திய அரசியல் சட்டம் வழங்கியிருந்த சில விசேஷ உரிமைகளை இரத்துச் செய் கின்ற சட்ட மசோதாவுக்கும் அதிமுக ஆதரவு அளித்தது. அதிலும் முஸ்லிம்கள் அதிர்ச்சியுறும் வண்ணம் குடியுரிமைச் சட்ட திருத்த மசோதா - 2019க்கு அதிமுக அளித்த ஆதரவின் காரணமாகவே அச்சட்டம் மாநிலங்களவையில் நிறைவேறியது.

குடியுரிமைச் சட்டத்திற்கு எதிராக நாடெங்கிலும் முஸ்லிம்கள் தன்னெழுச்சி யான மாபெரும் போராட்டங்களை நடத்தி னர். தமிழ்நாட்டிலும் போராட்டங்கள் நடை பெற்றன. போராட்டம் உச்சகட்டத்தில் இருந்த போது சட்டமன்றத்தில் இது சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய முதல்வர் எடப்பாடி தனது குரலை மிகப் பெரிதாக உயர்த்தி ‘குடியுரிமைச் சட்டம் வந்த பிறகு எந்த ஒரு முஸ்லிமாவது தமிழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளாரா? பின் ஏன் போராட்டம்?’ என்று குறிப்பிட்டார். இந்த முக்கியப் பிரச்னை குறித்து அவர் எந்த விதமான புரிதலுமின்றிப் பேசினார். மக்கள் தொகை குறித்த புள்ளி விவரப் படிவத்தில் கேட்கப்பட்டுள்ள புதிய கேள்விகளைக்கூட நீக்க அவர் உத்தரவாதம் தரவில்லை.

எடப்பாடி பழனிச்சாமி மட்டுமல்ல, எம்.ஜி.ஆர், ஜெயலலிதா ஆகியோரும் மென்மையான இந்துத்துவப் போக்கைக் கொண்டிருந்ததை இப்போது சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. 1981ஆம் ஆண்டு நெல்லை மாவட்டத்திலுள்ள மீனாட்சி புரம் என்ற கிராமத்திலிருந்து 180 தலித் மக்கள் இஸ்லாத்தை ஏற்றபோது இந்துத்துவா அமைப்புகள் அதற்கு எதிராகப் பெரும் போராட்டங்களை நடத்தின. பிரியாணி கொடுத்தும், வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஆசை காட்டியும் தலித்களை முஸ்லிம்கள் மதம்

மாற்றியதாகப் பொய்ப் பரப்புரை செய்தன. அப்போது தமிழக முதல்வராக இருந்த எம்.ஜி.ஆர் இந்துத்துவ அமைப்புகளின் நிலைப்பாட்டையே ஆதரித்தார். அந்த ஆண்டு பாளையங்கோட்டையில் நடைபெற்ற அதிமுக மாநாட்டில் பேசிய அவர் 'மதம் மாறிய தலித்கள் குர்ஆனைப் படித்துத் தெளிந்த பிறகுதான் இஸ்லாத்தில் இணைந்தார் களா' என்று கேள்வி எழுப்பினார். மதமாற்றத் தடைச்சட்டம் கொண்டு வரப் போவதாக அறிவித்தார். ஆனால் அவர் கொண்டு வர வில்லை. அவரது வாரிசான ஜெயலலிதா 2001 ஆம் ஆண்டு பதவிக்கு வந்தபோது 31.10.2022 அன்று சட்டமன்றத்தில் மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்.

2004ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வி ஏற்பட்ட பிறகு அந்தச் சட்டத்தை இரத்துச் செய்தார். அயோத்தியில் கரசேவையை ஜெயலலிதா ஆதரித்தார். கரசேவைக்கு தனது கட்சிக்காரர்களை அனுப்பி வைத்தார். இதிலிருந்து, பாஜகவுடன் கூட்டணி இருந்தாலும், இல்லாவிட்டாலும் அதிமுக ஒரு மென்மையான இந்துத்துவப் போக் கையே கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இப்போது அதிமுகவில் எடப்பாடி தனது நிலையை வலுப்படுத்தியுள்ளதால் அவர் பாஜக கூட்டணியிலிருந்து விலக வாய்ப்புகள் இருப் பதாக சில அரசியல் நோக்கர்கள் கருதுகின் றனர். திமுக கூட்டணியில் இடங்கள் கிடைக் காத சில முஸ்லிம் அமைப்புகளும் அப்படி ஒரு நிலையை விரும்புவதுபோல் தெரிகிறது.

எனினும், எடப்பாடியின் அதிமுக, பாஜ கவை உதறித் தள்ளுமா? தள்ள வேண்டுமென சமயச் சார்பற்ற மக்கள் எதிர்பார்க்கின்றனர். அதிமுக பலவீனமடைவது பாஜகவின் வளர்ச்சியில் போய் முடியும் என அவர்கள் அஞ்சுகின்றனர். அவர்களது அச்சம் நியாய மானதே. எடப்பாடி என்ன செய்வார்? பொறுத்திருந்து பார்ப்போம்.


# HIJAZ

## LEATHERS PVT. LTD.,

**Tanners & Exporters of**
**Finished Leathers & Fashion Gloves**

**HEAD OFFICE :**
17/7, Wuthucattan Street,
Periamet, Chennai - 600 003.
☎ : +91-44-25615938, 25612969.

**TANNERY :**
#1056/A1, Konamedu,
Vaniyambadi - 635 751.

**GLOVE FACTORY :**
560, National Highway - 46, Girisamudiram
Vaniyambadi - 635 751. ☎ : +91-4174-290590.
E-mail : pmyousuf@gmail.com, hijazleathersindia@yahoo.co.in
Website : www.hijazleathers.com

பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

# இஸ்லாமிக் சென்டர் - வேலூர்

## அன்பான வேண்டுகோள்

இஸ்லாமிக் சென்டர் வேலூர், இறைமார்க்கத்தைத் தழுவியவர்களுக்கு இஸ்லாமிய அடிப்படைக் கல்வியைக் கற்றுத்தரும் தனித்துவம் வாய்ந்த கல்வி நிறுவனமாகும். 1978 ஆம் ஆண்டு முதல் இதுவரை (45 ஆண்டுகள்) ஏறக்குறைய 10 ஆயிரம் பேர் மார்க்கக் கல்வி பயின்றுள்ளனர். ஆண்கள், பெண்களுக்குத் தனித்தனி தங்கும் விடுதியுடன் சிறப்பாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது.

### பணிகள் ஒரு பார்வை

### குல்லியத்துல் மஆரிஃப் பெண்கள் அரபிக் கல்லூரி

2001ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இக்கல்லூரியில் தற்போது கம்ப்யூட்டர் வசதி, தையற் பயிற்சியுடன் மூன்றாண்டு ஆலிமா பட்டப்படிப்பு சிறப்பாக நடத்தப்படுகிறது. இதுவரை (19th Batch) 90 மாணவிகள் ஆலிமா பட்டம் பெற்று பல தளங்களில் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

### மாணவர் தங்கும் விடுதி

இறைமார்க்கத்தைத் தழுவிய மாணவர்களின் மேற்படிப்பிற்காக மதுரையில் மாணவர் தங்கும் விடுதி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

### கிராமங்களில் பள்ளிவாசல்கள்

இறைமார்க்கத்தை ஏற்றுப் பின்பற்றுகின்ற 18 கிராமங்களில் மஸ்ஜிதுகள் கட்டப்பட்டு, இமாம்களை நியமித்து மேற்பார்வை செய்யப்படுகிறது.

பள்ளி, கல்லூரி விடுமுறை நாள்களில் மாணவ, மாணவிகளுக்குக் கோடைக்கால இஸ்லாமிய சிறப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

### இஸ்லாமிக் அகாடமி

சகோதர, சமுதாயச் சொந்தங்கள் இஸ்லாத்தைப் பற்றி அறிந்துகொள்ள இஸ்லாமிய நூல்கள் அஞ்சல் மூலம் இலவசமாக அனுப்பி வைக்கப்படுகிறது. TOLL FREE 18005723000 எண் மூலமாக இஸ்லாம் குறித்து அறிந்து கொள்ள ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இறையருளால் இப்பணிகள் தொடரவும், இன்னும் விரிவுபடுத்தவும் தங்களின் மேலான உதவியையும் ஜகாத் நிதியையும் எதிர்பார்க்கிறோம். அல்லாஹ் தங்களுக்கு அனைத்து அருள்வளங்களையும் தந்தருள்வானாக! ஆமீன்.

**ISLAMIC CENTER VELLORE**
19/4 MADAR SAHIB STREET,
R.N.PALAYAM, VELLORE - 632001
TEL : 0416 - 2223825
CELL : 9500190520
E-mail : icvellore@gmail.com

**BANK DETAIL:**
Cheque, DD or Bank Transfer Can be sent through Bank: Union Bank of India,
Vellore Branch, A/c No.: 33300-10100-19006
IFSC Code: UBIN0533301
Bank Transferer are requested to send SMS the details of Amount, Name, Address to 095001 90520

வாழ்க்கைப் பாடங்கள்
29

# ரமளான் நமக்குப் பயனளிக்கட்டும்!

- அஷ்ஷெய்க் A.C.அகார் முஹம்மது

*எவருடனும் பகைமை இருக்கும் நிலையில், சண்டை சச்சரவுகள் நிலவும் நிலையில், முரண்பாடுகளும் மோதல்களும் காணப்படும் நிலையில் ரமளானை நாம் சந்திக்கலாகாது.*

ரமளான் என்பது மறுமை வியாபாரிகளின் பருவ காலம் (Season). பருவ காலத்தில் உலக வியாபாரிகள் எப்படி மும்முரமாக, முழு மூச்சாக வியாபாரத்தில் ஈடுபடுவார்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். அதே போன்றுதான் முஃமின்கள் ரமளானில் மறுமை வியாபாரத்தில் முனைப்புடன் ஈடுபட வேண்டும்.

ரமளானுக்குத் தயாராகும் வகையில் அவசர அவசரமாக மனிதர்களுடனான உறவுகளைச் சீர்செய்து கொள்ள வேண்டும். எவருடனும் பகைமை இருக்கும் நிலையில், சண்டை சச்சரவுகள் நிலவும் நிலையில், முரண்பாடுகளும் மோதல் களும் காணப்படும் நிலையில் ரமளானை நாம் சந்திக்கலாகாது. வெறுப்பு, கோபம், அதிருப்தி, பகைமை, பொறாமை, தப்பெண்ணம் முதலான அசுத்தங்களைக் களைந்து சுத்தமான உள்ளத்தோடு ரமளானைச் சந்திக்க வகைசெய்வோம்.

வெறும் வாயும் வயிறும் நோன்பு நோற்கும் ரமளானாக மட்டுமன்றி நாவு, கண்கள், காதுகள் உட்பட எல்லா உறுப்புகளும் நோன்பு நோற்கின்ற ரமளானாக இந்த ரமளான் அமைய வேண்டும் என்பதை உத்தரவாதப்படுத்துவோம். இந்த வகையில் பொய், புறம் பேசுவதில்லை; கோள் சொல்லுவதில்லை; தர்க்க, குதர்க்கங்களில் ஈடுபடு வதில்லை; சண்டை, சச்சரவுகளில் ஈடுபடுவதில்லை;



யாருடைய உள்ளத்தையும் நோவினைப் படுத்துவதில்லை; புண்படுத்துவதில்லை; வீண் பேச்சுகள் பேசுவதில்லை; வீணாண காரியங்களில் பங்கேற்பதில்லை; அரட்டை அடிப்பதில்லை; வீணாக இரவில் விழித்திருப் பதில்லை; பகலில் அதிகம் தூங்குவதில்லை; மொத்தத்தில் நோன்பின் பயனைக் கெடுக்கும் எந்தவொரு செயலிலும் ஈடுபடுவதில்லை என்று உறுதி பூணுவோம்.

குறிப்பாக ரமளான் படைப்புகளுடனான உறவைக் குறைத்து படைப்பாளனுடனான உறவைக் கூட்டிக்கொள்ள வேண்டிய ஒரு காலம் என்ற வகையில் தொலைக்காட்சி, வானொலி, தொலைப்பேசி, சமூக வலை தளங்கள் முதலானவற்றுடனான தொடர்பை அறுத்துக் கொள்வோம்; குறைந்தபட்சம் குறைத்துக் கொள்வோம். தவிர்க்க முடியாத நிலையில் அத்தியாவசியத் தேவைகளுக் காகவும், ஆன்மிகத் தேவைகளுக்காகவும் மாத்திரம் மிகக் கவனமாக இவற்றைப் பயன்படுத்துவோம்.

மேலும் நல்லோர் வழிநின்ற நமது முன்னோர்கள் ரமளான் வந்து விட்டால் தமது முழு கவனத்தையும் திருக்குர்ஆனில் குவிப் பார்கள்.

இமாம்களான ஸுஹ்ரி, ஸுப்யானுஸ் ஸவ்ரி(ரஹ்) போன்ற ஹதீஸ்துறை அறிஞர்கள் ரமளான் வந்து விட்டால் அவர்களது ஹதீஸ் வகுப்புகளை இடைநிறுத்தி விட்டு முழுமையாக குர்ஆனின் பக்கம் திரும்பி விடுவார்கள். நாமும் இந்த ரமளானில் திருக்குர்ஆன் திலாவத்தை நமது முதல் தர அமலாக அமைத்துக் கொள்வோம். பல முறை திருக்குர்ஆனை ஓதிமுடிக்க முயற்சி செய்வோம். குறைந்தபட்சம் ஒவ்வொரு நாளும் ஓரிரு ஜுஸ்ஊக்களையாவது (பாகம்) ஓதுவோம். ஒவ்வொரு நாளும் அதன் சில வசனங்களையாவது கற்க முயல் வோம்.

திருக்குர்ஆனை திருத்தமாக ஓதக் கற்றுக் கொள்ள ரமளான் காலம் மிகவும் பொருத்த மானது. அவ்வாறே திருக்குர்ஆனின் சில அத்தியாயங்களையாவது இந்த ரமளானில் மனனமிட உறுதிகொள்வோம்.

‘யார் ரமளானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வணங்கு கின்றாரோ, அவர் முன்செய்த பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படும்’ என்ற நபிமொழியை மனதிற்கொண்டு, ஐங்காலத் தொழுகைகளை ஜமாஅத்தோடு(கூட்டாகத்) தொழுவதோடு, முன் பின் ஸுன்னத்தான தொழுகைகளையும் நிறைவேற்றுவோம். ழுஹா, தராவீஹ், கியாமுல் லைல், வித்ர் முதலான தொழுகைகளையும் தவறாது தொழுது வருவோம்.

அவ்வாறே காலை, மாலை திக்ருகளை ஓதுவதோடு துஆ, தவ்பா, இஸ்திஃபார் முதலானவற்றில் அதிகம் ஈடுபடுவோம். நபி (ஸல்) அவர்கள் ரமளானில் வேகமாக வீசும் காற்றை விட அதிகமாக அள்ளி, அள்ளிக் கொடுப்பார்கள்; தர்மம் செய்வார்கள். எனவே நாமும் ஜகாத், ஸதகா, ஹதிய்யா என்று எல்லா வழிகளிலும் வகைகளி லும் தர்மம் செய்வோம்; உற்றார் உறவினர்கள், அண்டை அயலவர்கள், ஏழை எளியவர்கள் என எல்லோருக்கும் உதவுவோம். ஸதகா செய்யாத நிலையில் இந்த ரமளானில் ஒருநாள்கூட கழியாமல் இருக்கட்டும்.

எதிர்வரும் ரமளானை வினைத்திறனும் விளைத்திறனும் கொண்ட, எல்லா வகையிலும் பயன்மிக்க ரமளானாக அமைத்துக் கொள்ள நமது தினசரி செயற்பாடுகளுக்கான ஒரு கால அட்டவணையை(Time table) தயார் செய்து கொள்வோம்.

ரமளான் தஸ்கியத்துன் நஃப்ஸ் எனும் உளத்தூய்மையை இலக்காகக் கொண்ட மாதம். ஆன்மாவைப் பரிசுத்தப்படுத்தி, போஷித்து வளர்க்கும் மாதம். ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி மேம்படுத்த நான்கு வழிகள் உண்டு; அந்த நான்கையும் நிறைவாகக் கடைப்பிடிக்கும் வாய்ப்பை ரமளான் நமக்குத்

தருகிறது. அவற்றில் முதலாவது பசித்திருத்தல். ரமளானில் பகல்பொழுது முழுவதும் பசித் திருக்கின்றோம். உணவுக் கட்டுப்பாடு உடல், உள ஆரோக்கியத்திற்கு இன்றியமையாதது என எற்றுக்கொள்ளாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

குறிப்பாக ஆன்மாவின் மேம்பாட்டிற்கும் உணவுக் கட்டுப்பாட்டுக்கும் இடையிலே நெருங்கிய தொடர்பு இருக்கிறது. உண்மை யான இறையடியார்கள் பசியில்லாமல் சாப்பிடுவதில்லை. சாப்பிடும்போதும் வயிறு நிறையச் சாப்பிடுவதில்லை. 'உண் ணுங்கள் பருகுங்கள் விரயம் செய்யாதீர்கள்' என்பது அல்லாஹ்வின் கட்டளை. இங்கு விரயம் செய்வதென்பது மிதமிஞ்சி, வயிறு புடைக்க உணவு உட்கொள்வதையும் குறிக்கும்.

ஒருவர் தனது முதுகெலும்பை நிமிர்த்தி நிற்கும் அளவிற்கான உணவை உட்கொள் வதே போதுமானதாகும். அவர் சாப்பிடுவதாக இருந்தால் ஒரு பகுதியை உணவிற்கும், மற் றொரு பகுதியை தண்ணீருக்கும், எஞ்சிய மூன்றாவது பகுதியை மூச்சுக்கும் விட்டு விடட்டும் என்பது நபியவர்களின் வழி காட்டல்.

உணவுக் கட்டுப்பாட்டைப் பேணாமல் வயிறு நிறையச் சாப்பிடுகின்ற காரணத்தால் ஆன்மாவிற்கு ஏற்படும் ஆபத்துகளை நமது ஆரம்பகால இமாம்கள் அற்புதமாக விளக்கியிருக்கிறார்கள். மிதமிஞ்சிய உணவு வணக்க வழிபாடுகளில் காணப்படும் ருசி யைக் கெடுத்துவிடும். அறிவுத் தேடலை பாதிக்கும். உள்ளத்திலே இரக்கக் குணத்தைப் போக்கிவிடும். வணக்க வழிபாடுகளைச் சுமையாக மாற்றிவிடும். ஆசாபாசங்களைத் தீவிரமடையச் செய்யும் என்று எச்சரித்துள் ளார்கள் அபூ சுலைமான் அத்தாரானி(ரஹ்).

இமாம் ஷாஃபிஈ(ரஹ்) அவர்கள் சொல்கிறார்கள்: 'நான் பதினாறு ஆண்டு களாக வயிறு நிறையச் சாப்பிட்டதே இல்லை'. ஏனெனில் வயிறு நிறையச் சாப்பிடுகின்ற காரணத்தால் உடல் ஒரு சுமையாக மாறு கின்றது. உள்ளம் மென்மையை இழந்து வன்மை அடைகின்றது. புத்தி கெட்டுப் போகின்றது. தூக்கம் மிகைக்கின்றது. வாயைக் கட்டுப்படுத்தி உணவைக் குறைத்துக் கொள் பவர்கள் அடையும் நன்மைகள் பல. ஒருவர் அதிகம் உணவு உட்கொள்வதைத் தவிர்த்தால் உள்ளம் தெளிவடையும்; விழிப்புடன் இருக்கும்; மேன்மை அடையும்; கர்வம் குறையும்; பாவங்களில் மோகம் இல்லாமல் போகும்; உள்ளத்தின் ஆசாபாசங்களை அடக்கி ஆளும் வல்லமை உண்டாகும்; தூக்கம் குறையும்; சுறுசுறுப்பு உண்டாகும்; வணக்க வழிபாடுகளில் ஆர்வம் மிகைக்கும்.

எனவே ஏக காலத்தில் உடல் ஆரோக் கியத்திற்கும் ஆன்மாவின் மேம்பாட்டிற்கும் பெருந்துணையாக அமைகின்ற உணவுக் கட்டுப்பாட்டைப் பேணுவதற்கும், அதற்கான பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்குமான அற்புதமான வாய்ப்பை ரமளான் நமக்குத் தருகிறது. இஃப்தார், ஸஹர் நேரங்களில் மிதமிஞ்சி வயிறு புடைக்கச் சாப்பிடுகின்ற போது, பகல் வேளையில் பசித்திருந்து பெற்ற நன்மைகளையும் பலன்களையும் இழந்து விடுகிறோம் என்பதனை மனதில் கொண்டு செயல்பட வேண்டும்.

நோன்பு நோற்பதால் உலகியல் சார்ந்து பல நன்மைகள் கிடைப்பது உண்மையாக இருந்தாலும், நாம் நோன்பு நோற்பது இறை வனின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும்; அதன் மூலம் இறைவனின் திருப்தியைப் பெறவேண்டும் என்பதுவே முதன்மையான இலக்கு. இந்த ரமளான் நாம் அர்த்தமுள்ள வகையில் பசித்திருந்து, ஆரோக்கியம் பேணிய ரமளானாக அமையட்டும். இந்தப் பயிற்சி ரமளானுக்குப் பிறகும் நமக்குப் பயனளிக்கட்டும்.

மிக முக்கியமாக ரமளானை அடைந்தும் அதில் பாவமன்னிப்பைப் பெறத் தவறிய துர்பாக்கியவான்களாக நானோ நீங்களோ ஆகிவிடக் கூடாது.

# மதரஸா-யே-இம்தாதியா, மேல்விஷாரம்

அல்ஹம்துலில்லாஹ் 2010-ம் ஆண்டு மக்தப் ஆக தொடங்கிய நமது நிறுவனம் படிபடியாக வளர்ச்சி அடைந்து தற்போது நாழிரா, ஹிப்ழு, ஜும்ரா மற்றும் கிராத் ஆகிய பிரிவுகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

மதரஸாவில் 100 மாணவர்கள் 120 மாணவிகள் ஓதி வருகின்றனர். (இதில் 35 மாணவர்கள் (ம) 10 மாணவிகள் பார்வையற்றவர்கள்)

இதுவரை சுமார் 17 மாணவர்கள் 10-ம் வகுப்பு மற்றும் 12 மாணவர்கள் கல்லூரி பட்டபடிப்பு முடித்துள்ளனர்.

ரஸ்முல் கத் அடிப்படையில் பிரைலி குர்ஆனை தயார் செய்து இந்தியா மற்றும் சர்வதேச அளவில் சுமார் 700 பார்வையற்றோருக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. ஒரு பிரதி பிரைலி குர்ஆன் தயாராவதில் ரூ.2000/- செலவாகிறது.

மதரஸாவில் 16 ஆசிரியர்கள் மற்றும் 5 பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மதரஸாவிற்காக சொந்த இடமோ கட்டிடமோ இல்லை. தற்காலிக கட்டிடத்தில்தான் (SHEET HALL) செயல்பட்டு வருகிறது. எனவே மாணவர்களுக்கு மழை, வெயில், குளிருக்கான போதிய வசதிகள் இல்லை.

அல்லாஹ்வின் மாபெரும் கிருபையாலும் மக்களின் நன்கொடையை கொண்டும் மாணவ, மாணவிகளின் அடிப்படை தேவைகள் (கல்வி, விடுதி, உணவு, உடை, மருத்துவம், பயணம், பள்ளி மற்றும் கல்லூரி கட்டணம்) அனைத்தும் மதரஸாவின் மூலம்தான் நிறைவேற்றப்படுகின்றது.

**கனிவான வேண்டுகோள்: மதரஸாவின் வருடந்திர, மாதாந்திர, வாராந்திர மற்றும் தினசரி செலவுகளில் தங்களின் (நன்கொடை, ஸதகா, ஜகாத், ஸதகாதுல் ஜாரியாவை) கொண்டு பங்கெடுத்துக் கொள்ளவும். ஜஸாக்கல்லாஹு கைரா.**

## மதரஸாவின் கல்வி பிரிவுகளின் முழு விளக்கம்

| பிரிவுகள் | மாணவர்கள் | மாணவிகள் | பார்வை அற்றவர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| நாழிரா | 30 | 20 | 10 | 50 |
| ஹிப்ழு | 42 | 72 | 35 | 114 |
| ஜும்ரா | 28 | 08 | 18 | 36 |
| கிராத் | 28 | மக்தப் 20 | 18 | 20 |
| 10th | 17 | 89 | 13 | 106 |
| 12th | 08 | - | 03 | 08 |
| கல்லூரி | 12 | - | 02 | 12 |
| | | | மொத்தம் | 220 |

## செலவினங்கள்

| | |
|---|---|
| ஒரு மாணவனின் மாதாந்திர செலவு | 5,000 |
| நிறுவனத்தின் மாதாந்திர செலவு | 5,00,000 |
| ஒரு மாணவனின் வருடாந்திர செலவு | 60,000 |
| நிறுவனத்தின் வருடாந்திர செலவு | 60,00,000 |
| மதரஸாவின் கடன் | 27,00,000 |

## பட்டம் பெற்றவர்கள்

| | |
|---|---|
| மொத்த ஹாபிழ்கள் | 27 |
| மொத்த உலமாக்கள் | 12 |
| மொத்த ஹாபிழாக்கள் | 81 |

G Pay
Google pay or PhonePe: 9952120340 (IMDADIYA EDU)
Scan and pay with any BHIM UPI app
G Pay PhonePe Paytm

**A/C Name : IMDADIYA EDUCATIONAL & CHARITABLE TRUST**

STATE BANK OF INDIA
CURRENT ACCOUNT NO : 35612371063
Melvisharam Branch Code : 3783
IFSC : SBIN0003783

INDIAN BANK
CURRENT ACCOUNT NO : 6288904753
Melvisharam Branch Code : 1312
IFSC : IDIB000M139

اَلْمَدْرَسَةُ الْإِمْدَادِيَّةُ لِلْمَكْفُوْفِيْنَ بِمِيْلْ وِشَارَمْ تَمِلْ نَادُوْ اَلْهِنْد

**MADRASA-E-IMDADIYA FOR THE BLIND**
Run By : Imdadiya Educational & Charitable Trust
Registered under section 12AA of the Income Tax Act,1961 as per
Regd no. CIT (Exemption),Chennai/12AA/2020-21/A/11499

539,Anna Salai, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509
E-mail : imdadiya.wes@gmail.com Web : imdadiyaforblind.org
Contact : +91-9952120340 Telephone : 04172 268500

Regd. No:59/2014
Estd: 1431-H/2010

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான அஸ்ஸாமில் ‘குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம்’ என்ற சட்டத்தின் மூலம் முஸ்லிம்களின் மீதான பழிவாங்கலைத் தொடங்கியிருக்கிறது பா.ஜ.கவின் ஹேமந்த் பிஸ்வா சர்மா அரசு. பெண்ணோ, ஆணோ பருவமடைந்ததும் திருமணம் செய்துகொள்ள அவர்களின் உடல் தயாராகிவிடுவதுபோல மனமும் தயாராகி விடுகிறது என்பது உடற்கூறியல் ஆய் வாளர்கள் சொல்லும் கருத்தாகும். இதனை கருத்தில் கொண்டே எக்காலத்திற்கும் பொருத்தமான சட்டங்களை வழங்கியுள்ள திருக்குர்ஆன் பருவமடைந்த பெண்ணிற்கோ, ஆணிற்கோ திருமணம் செய்யலாம் என்று உரைக்கிறது.

இந்தியாவில் முஸ்லிம்களுக்குத் தனி சிவில் சட்டம் (Muhammadan Law) திருமணம், விவாகரத்து, வாரிசுகள், சொத்துகள், வக்ஃபுகள் என சிலவற்றை தனிச் சட்டமாக அரசியலமைப்பு அங்கீகரிக்கிறது. இதில் அஸ்ஸாமில் இயற்றப்பட்ட ‘குழந்தைத் திருமண தடுப்புச் சட்டம்’ முஸ்லிம்களையும், இன்னும் சில சிறுபான்மையினரையும் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே இந்தச் சட்டம் மூலம் முஸ்லிம்களைக் கைது செய்வது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள தனிப்பட்ட உரிமையை மீறுவதும், பறிப்பதும் ஆகும். வரும் தேர்தல்களில் முஸ்லிம்களின் வாக்குவங்கி பா.ஜ.கவின் அதிகாரத்தை அஸ்ஸாமில் காலி செய்துவிடும் என்ற பயத்தில் பா.ஜ.க அரசு இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி இந்த இரண்டு, மூன்று வாரங் களில் ஏறக்குறைய 3000 நபர்களைக் கைது செய்திருக்கிறது. குறிப்பாக இதில் 90% முஸ்லிம்களே பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

குறிப்பாக இளம் பெண்களின் பெற்றோர்கள், திருமணம் செய்துவைத்த குடும்பப் பெரியவர்கள், ஆலிம்கள் ஆகி யோரைக் கைது செய்திருக்கிறார்கள். கணவர் களைக் கைது செய்துவிட்டதால் பெண்கள் வருமானமின்றி கைக்குழந்தைகளோடு சாலைகளில் இறங்கிப் போராடும் காட்சிகள் மனதைக் கனக்கச் செய்கிறது. அஸ்ஸாமில் வாழும் முஸ்லிம்கள் இந்த நாடும், சக

# அஸ்ஸாம்

## நிரம்பிவழியும் சிறைச்சாலைகள்..!

**- கப்ளிசேட்**



முஸ்லிம்களும் தங்களைக் கைவிட்டு விட்டதாகவே எண்ணுகின்றனர். அவர்கள் அரசின் அடக்குமுறைக்குப் பயந்து தங்கள் உயிர்களை மாய்த்துக் கொள்ளத் தொடங்கியிருப்பது ஜனநாயகத்தின் மிகப் பெரிய அவமானமாகும். அரசியல் கட்சிகளோ, சமூக அமைப்புகளோ தங்களைக் காக்காதபோது, இந்திய நீதிமன்றங்களாவது தங்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்று எதிர்பார்ப்பது நீதிமன்றங்கள் மீது அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

அஸ்ஸாமில் உள்ள சிறைகள் மிகவும் இடவசதி குறைந்தவைகளாகும். ஒரே நேரத்தில் திடீரென செய்யப்படும் கைதுகளால் சிறைகளில் இடமில்லாமல் சிறைத்துறையே குழப்பத்தில் இருப்பதாக செய்திகள் வெளியாகின்றன. தற்காலிகச் சிறைகளைத் திறக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின்றன. அஸ்ஸாம் அரசின் இந்தத் திடீர் கைது நடவடிக்கைகளால் மக்கள் மிகுந்த அச்ச உணர்வுடன் உள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் கல்வி அறிவு குறைந்த, வறுமையில் வாடும் எளிய மக்களாய் உள்ளனர்.

கைது செய்யப்பட்ட தங்கள் குடும்பத்தினர்கள் எந்தச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர், எப்போது விடுதலை ஆவார்கள் என்பதையறியாமல் அவர்கள் மிகுந்த மனநெருக்கடியில் உள்ளனர். துப்ரி மாவட்டத்திலுள்ள ராம்ராய்க்குடி கிராமத்தைச் சேர்ந்த அய்னாபீவி என்ற பெண் தனது மருமகன்களைக் கைது செய்வதைத் தடுக்க முடியாமல் கடந்த பிப்ரவரி 10ஆம் தேதி தற்கொலை செய்து கொண்டார். 18 வயதுக்குக் கீழுள்ள பெண்களைத் திருமணம் செய்த ஆண்களைக் கைது செய்ய அவர்கள் வீட்டிற்குச் செல்லும் போலீஸார் பெண்களின் வயது சான்றிதழைக் கேட்கின்றனர்.

வயது சான்றிதழ் இல்லாதவர்களை மிக எளிதாகவும், வயது சான்றிதழ் கொடுப்பவர்களையும் கண்டுகொள்ளாமல் இது சட்டவிரோதத் திருமணம் என்றுகூறி கைது செய்து அழைத்துச் செல்லும்போது கல்வியறிவு இல்லாதவர்களாகவும், வறுமையில் வாடுபவர்களாகவும் உள்ள மக்கள் போலீஸுக்குப் பயந்து உடன் செல்கின்றனர். எதிர்த்து கேள்வி கேட்பவர்களை குடும்பத்தினர் முன்னிலையிலேயே அடித்து, உதைத்து இழுத்துச் செல்லும் அவலங்களும் அரங்கேறி வருகிறது. இந்தச் செய்திகள் பெரும்பாலான ஊடகங்களில் வெளியாகவில்லை. சமூக ஊடகங்கள் மூலமாகவே செய்திகள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள 31 மாவட்டங்களில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் பிஸ்வநாத், பார்பேடா, பக்சா, துப்ரி, ஹோஜாய், போங்காய்கான், நாகோன்போன்ற ஏழு மாவட்டங்களில் மட்டும் ‘குழந்தைத் திருமணத் தடுப்பு’ என்ற பெயரிலான கைதுகள் குறிப்பாக முஸ்லிம்களைக் குறிவைத்தும், அங்கொன்றும், இங்கொன்றுமாக பிற சமூக மக்களின் கைதுகளும் தொடர்கின்றன. அஸ்ஸாமில் வங்காள வம்சாவளியைச் சேர்ந்த மக்கள் பரவலாக வாழ்கின்றனர். அவர்களை ‘வந்தேறிகள்’ என ஒதுக்கவும், வரும் 2026 சட்டசபைத் தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குவங்கியைச் சிதைப்பதற்கும் இது போன்ற சட்டங்களைத் திடீரென நடைமுறைப்படுத்தி குறிப்பாக முஸ்லிம்களை அச்சுறுத்துவதாக கல்வியாளர்கள், மூத்த பத்திரிகையாளர்கள், சமூக ஆர்வலர்கள் பலரும் கருத்து கூறியுள்ளனர்.

திருமணம் செய்துவைத்த பெற்றோர்கள், மௌலவிகள் என இதுவரை 8100 நபர்களின் மீது போலீஸில் புகார் பதிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. 14 வயதிற்குக் கீழுள்ள பெண்களைத் திருமணம் செய்த ஆண்கள் மீது குழந்தைகளை பாலியல் தொந்தரவுகளிலிருந்து பாதுகாக்கும் கடுமையான சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டு, ஜாமீனில் வெளிவரமுடியாத ஏழு ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை தண்டனைகள் விதிக்கும் சட்டப் பிரிவு, போக்ஸோ சட்டப்பிரிவுகளைப் பயன்படுத்துவது எவ்வளவு ஆபத்தான போக்கு என்பதை நாம் அனைவரும் புரிய

வேண்டும். அஸ்ஸாம் முதல்வர் ஹேமந் பிஸ்வா சர்மா இந்தக் கைது நடவடிக்கைகளை 'குழந்தைத் திருமணத்திற்கு எதிரான போர்' என்று பிரகடனப்படுத்துகிறார். குறிப்பாக வங்காள முஸ்லிம்களைக் குறிவைத்து கைது செய்வதையும், முஸ்லிம்களுக்கு அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள தனிச் சட்ட திருமண உரிமைகள் இருக்கும்போது இந்தச் சட்டம் முரண்படுவதையும் சுட்டிக் காட்டி கல்வியாளர்களும் பத்திரிகையாளர்களும் கேள்வி எழுப்புகின்றனர்.

அஸ்ஸாமில் துப்ரி மாவட்டத்தில் வசிக்கும் கலீதுல் ரஷீத் பேசத் தொடங்கும் போதே உடைந்து போய் அழுதுகொண்டே கூறுகிறார். அவரின் மகள் குல்சூம்கான் கடந்த பிப்ரவரி 4ஆம் தேதி தற்கொலை செய்து கொண்டார். பருவமடைந்து 14 வயதில் திருமணம் செய்துகொண்ட அவர் கோவிட்-19 இல் அவரது கணவர் இறந்தபோது தனது இரண்டு குழந்தைகளோடு தனது பெற்றோர் வீட்டில் குடியேறினார். இது போன்ற கைது நடவடிக்கைகளையறிந்த அவர் தனது தந்தையிடம் தனது வயது சான்றிதழையும், திருமணச் சான்றிதழையும் கேட்டார். கணவன் இறந்துவிட்டதால் அது தேவையில்லை என்று தந்தை கூறியதால் பதற்றமாகவே இருந்த அவர், தனது பெற்றோரை போலீஸார் கைது செய்துவிடுவார்கள் எனப் பயந்து தனது உயிரை மாய்த்துக்கொண்டார்.

சமூக ஆர்வலர் கலாம் கூறுகையில் 'முஸ்லிம் சமூகம் மிகவும் பிளவுபட்டுள்ளது. ஆகவே இவர்களை எதிர்த்துக் கேட்க நாதியில்லை' என்று கூறுகிறார். பாதிக்கப்பட்ட எட்டு பெண்களுக்கு ஆதரவாகப் போராடும் வழக்கறிஞர் மசூத் ஜமான் கூறுகையில், கல்வியறிவு இல்லாத வறுமைக் கோட்டில் வாழும் மக்களே அதிகம் கைது செய்யப்பட்டுள்ளனர். பெண்களின் பிரச்னையை முன்வைத்து சமூகப் பிரச்னைகளை வகுப்புவாத பிரச்னைகளாக மாற்றி முஸ்லிம்களை அச்சப்படுத்தவே பா.ஜ.க இதனை ஆயுதமாகப் பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டுகின்றார்.

முக்கியமாக பழங்குடி சமூகங்கள் வசிக்கும் மஜுலியில் ஒரேநாளில் 24 முஸ்லிம் அல்லாத மக்களுக்கு ஜாமீன் கிடைத்தது. ஆனால் அதுபோல குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிம்களுக்கும் அது போலவே வாதிட்டோம். ஆனால் ஜாமீன் பெற முடியவில்லை என்பதை வேதனையோடு குறிப்பிட்டுள்ளார். மஜுலியில் மாவட்ட நீதிமன்றம் வழங்கிய ஜாமீன் உத்தரவுகளின் நகலொன்றை BBC பார்வையிட்டது. அதில் 'தெளிவற்ற, போதிய காரணங்கள் இல்லாமல் கைதுகள் செய்யப்பட்டிருப்பதாக இருப்பது, போலீஸாரின் அராஜக நடவடிக்கைகளை அறியமுடிகிறது. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நிதியுதவி அளிப்பதாகக் கூறுவது அரசாங்கத்தின் உணர்ச்சியற்ற, மரத்துப் போன செயல்பாடு என்றும், கணவன் மனைவி பிரிதலை அது எப்படி நியாயப்படுத்தும் என்றும் வழக்கறிஞர் ஜமான் கேள்வி எழுப்புகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதுருதீன் அஜ்மல் கூறும்போது அஸ்ஸாமில் 31 விழுக்காடு பெண்கள் 18 வயதிற்கு முன்பே திருமணம் செய்து இன்று கணவன், குழந்தைகளோடு வாழ்ந்து வருபவர்களாவர். இதில் 90 விழுக்காட்டினர் முஸ்லிம்கள். முதல்வரின் உத்தரவுப்படி, இவர்களைக் கைது செய்து சிறையில் அடைப்பதே அவசரப் பணிபோல கைது செய்யும் காவல்துறை, இவர்கள் அனைவரையும் கைது செய்து சிறையில் அடைப்பதால் என்ன



பலன் என்று கேள்வி எழுப்புகிறார். இதனால் ஏற்படும் சமூகப் பதற்றத்தைச் சுட்டிக் காட்டும் பதுருதீன் அஜ்மல் ‘ஆண்களைக் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டு பெண்களையும், குழந்தைகளையும் அநாதைகளாகத் தெருவில் உலவவிடப் போகிறதா இந்த அரசு?’ என கேள்வி எழுப்புவதோடு, மனிதநேயமற்ற இந்த நடைமுறைகளை வன்மையாகக் கண்டிக்கிறார். இவற்றையெல்லாம் கண்டு கொள்ளவே அரசாங்கம் தயாரில்லை.

‘பருவமடைந்து 14 வயதில் திருமணம் செய்தவர்கள் இன்று 18 வயதைத் தாண்டியவர்களாக வாழும்போது அவர்களின் செயல்களுக்காக முன் தேதியிலிருந்து கைது செய்வது எப்படி நியாயமாகும்?’ என்று பொது சமூகத்தினர் ஒட்டுமொத்தமாகக் கேள்வி எழுப்புகின்றனர். ஆனாலும் வழக்கம்போல ஃபாசிஸ ஆட்சியாளர்களின் காதுகளில் விழாமல், அவற்றைக் கண்டுகொள்ளாமல் அவர்கள் தங்களின் செயல்களிலேயே கவன மாக இருப்பது ஜனநாயக விரோதமாகும். இதில் சட்டம் இயற்றுவதற்கு முன்பே திருமணம் செய்தவர்களையும் கைது செய் திருப்பது காழ்ப்பு உணர்வையே காட்டு கிறது. இது போன்ற கைதுகளை தினமும் மகிழ்ச்சியுடன் அரசாங்கம் ஊடகங்களில் பகிர்ந்து வருகிறது. இது போன்ற அச்சு றுத்தல்கள் மக்களை விழிப்படையச் செய்யும் என்று காரணம் கூறுவது மக்களை மனரீதியாக அச்சுறுத்தும் ஃபாசிஸ எதேச் சதிகாரமாகும்.

பருவமடைந்தவுடன் திருமணம் செய்கிற உரிமைகளைப் பெற்று இருந்தாலும், இது போன்ற சிறுவயதுத் திருமணங்கள் நடை பெறுவதற்குப் பல காரணங்களைச் சமூக ஆர்வலர்கள் பதிவு செய்கின்றனர். கல்வி யறிவு இல்லாமை, வறுமை, சமூகப் பாதுகாப் பில்லாமை, பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களுக்குத் திருமணம் செய்துவைத்து தங்கள் கடமைகளை முடித்துவிடும் மனநிலை என்று பல பொதுக் காரணங்களைப் பரவலாக அறியமுடிகிறது.

பிற பிரிவினரை விட அதிகமாக பிற்படுத் தப்பட்டவர்கள், தலித்கள், முஸ்லிம்கள் இடையே சிறுவயதுத் திருமணங்கள் அதிகம் நடைபெறுவதற்கு சமூகப் பொருளாதாரம் சார்ந்த பிரச்னைகளே காரணமாக இருக்கிறது. பா.ஜ.க அரசு மதரஸாக்களை மூடவும், புல்டோசர் வைத்து இடிக்கவும் செய்தது. இதனால் ஏழ்மை நிலையிலிருந்த முஸ்லிம் பெண் குழந்தைகள் கல்வி கற்பதும், விழிப்பு உணர்வு பெறுவதும் தடைபட்டதால் பெண் குழந்தைகளின் கல்விச் சூழல் சிதைந்து போனது. பெண் குழந்தைகளின் கல்வி கற்கும் விகிதமும் மிகவும் குறைந்து போனது.

கைது நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு பிற்படுத்தப்பட்டவர்கள், தலித்கள், முஸ்லிம்களின் குறிப்பாக பெண் குழந்தைகளின் கல்வியில் ஆளும் பா.ஜ.க அரசு கவனம் செலுத்த வேண்டும். இந்த எளிய மக்களின் சமூகப் பாதுகாப்பிற்கான திட்டமிடல்களைச் செய்ய வேண்டும். இவர்களின் பொருளாதாரம் மேம்பட தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்த வேண் டும். தொடர்ந்து விழிப்பு உணர்வு பரப்புரைகளைச் செய்து மக்களின் மன நிலையை அச்சமற்றதாக உருவாக்க வேண்டும்.

தேர்தலுக்கான வியூகமாக முஸ்லிம்களைச் சிதைக்க வேண்டும் என்ற மனநிலையை மாற்றி வளர்ச்சி, சமூகப் பாதுகாப்பு, அனைத்து மத மக்களுக்குமான சமஉரிமை, சமூகநீதி, ஜனநாயகம் போன்ற உயர்ந்த மாண்புகளை ஒன்றிய அரசும், பா.ஜ.க ஆளும் மாநில அரசுகளும் கடைப்பிடித்தால் மக்களைப் பிளவுபடுத்தி அடையும் அரசியல் ஆதாயங்களை விட, மக்களை ஒன்றுபடுத்தி அதிக ஆதாயங்களை அடையலாம் என்பது பொது ஆர்வலர்களின், அறிவுஜீவிகளின், நடுநிலை ஊடகவியலாளர்களின் கருத் தாக இருக்கிறது. இது அஸ்ஸாமிற்கு மட்டுமல்ல முழு இந்தியாவிற்குமான கருத் தாகும்.




# SYED TRAVELS




## HAJ & UMRA SERVICES

**Customized package available for Family and Groups**

**Individual Umra visa Stamping with Medical & Insurance coverage available**

### RAMADAN UMRA PACKAGE

**First 15 days - 1,40,000**
**Last 15 days - 1,75,000**

- Makkah - Misaryi Palace hotel (Diyafat Al Mubarak) Just 300 meters..
- Madina Munawar - Diyar Tayabah - just three minutes walk...
- 3 Times Delicious Meal By TAMIL NADU CHEF
- Saudia or Any available Airlines
- Transportation by Luxurious Bus
- All ziyarat(s) in Makkah and Madina
- 5 Ltr ZAMZAM
- Hijab Scarf for ladies
- Medium Bag, Passport Bag, Chappal Bag, Dua Kitab & Tawaf Tasbeeh

## HAJ BOOKING STARTED

- Delux package (Hotel Areej Al Falah) - Rs.5,50,000 + TCS + GST
- 5-Star Package (Hotel Hilton / Elaf kinda) - Rs.6,50,000 + TCS + GST

## STUDY ABROAD

We are pleased to offer the following services to our esteemed customers...

- Study abroad in different countries
- Education Consultancy Services
- Study MBBS in Russia.
- Graduation & Post Graduation courses abroad in prestigious universities in following countries...

  Australia, Canada, Germany, Switzerland, UK, UAE and many more countries

## TRAVEL SERVICES

- JOB SEARCH E-VISA STAMPING DONE FOR DUBAI

1. Ticketing - National & International.
2. Holiday Packages - Both Honeymoon / Family.
3. Stamping of E-Visa Processing to nearly 26 countries.
4. Passport Processing - Both New and Re-newal.
5. All Govt related 23+ Services.

**for more details contact us directly**

**Mobile: +91 988427 8587 / +91 9150 445520**

**Email :syedtravels@yahoo.in**

Address : 10 Links Plaza, (Opposite DG Vaishnava College),
Dr. Radhakrishnan Nagar, Poonamallee High Road,
Arumbakkam, Chennai - 600 106.

அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் ...

المدرسة الجنة ودارالأيتام

Regd. No. : 28/BK IV/15

# அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா

## தேவாரம் - 625 530. தேனி மாவட்டம்.

Oh my Allah... Increase my Knowledge
Al Jannath
Yetheemkhana Madarasa

**பேரன்புடையீர், அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்...)**

## அன்பான வேண்டுகோள் ...

**தேனி மாவட்டத்தில் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வரும் நமது அல்ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸாவில் 50-க்கும் மேற்பட்ட எத்தீம் மாணவியர்கள் ஈருலக நற்கல்வி பயின்று வருகிறார்கள். முழுமையான மார்க்க கல்வியுடன் பள்ளி, கல்லூரிகளிலும் பயின்று வருகிறார்கள். எத்தீம்களைப் பராமரிக்கும் இந்த அறப்பணிக்கு மாதந்தோறும் சுமார் ரூ. 3, 00,000/- வரை செலவாகிறது. அவர்களின் கல்விக்கும், வாழ்வின் உயர்விற்கும் தங்களது ஜகாத்/ஸதகா-வை வழங்கி உதவுமாறு மிக்க அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

**(பயபக்தியுடைய) அவர்கள் (எத்தகையோரென்றால்) அல்லாஹ்வின் மீதுள்ள அன்பினால் ஏழைகளுக்கும், எத்தீம்களுக்கும், சிறைப்பட்டோருக்கும் உணவளிப்பார்கள்.**

அல்-குர்ஆன் - 76:8






**Google Pay/PhonePe: 87542 22470**

இன்ஷா அல்லாஹ் வங்கியில் பணம் செலுத்தியபின் மதரஸாவிற்கு தகவல்தெரிவிக்கவும்.

தங்களது **ஜகாத் / ஸதகா** போன்ற உதவிகளை அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா எனும் பெயருக்கு DD/ செக் மூலமாக கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி எத்தீம்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**வங்கி விபரம்**

**AL JANNATH YATHEEMKHANA MADRASA**
**A/C No : 35486597490 State Bank of India**
**Thevaram Branch, IFS Code : SBIN0014441**

**C.அபூபக்கர் சித்தீக்** தஃவத்தி, D.T.T., நிர்வாகி

**அல் ஜன்னத் எத்தீம்கானா மத்ரஸா**

**27/2, W-17, 5-வது தெரு, தேவாரம் - 625 530**

**தொடர்புக்கு**
**04554-254021**
**099443 77681**

# அவனைத் தவிர அனைத்தும் அசத்தியமே!

நீங்கள் காணவில்லையா? அல்லாஹ்தான் இரவைப் பகலில் கோத்துக்கொண்டு வருகின்றான். பகலை இரவில் கோத்துக்கொண்டு வருகின்றான். மேலும், அவன் சூரியனையும் சந்திரனையும் வசப்படுத்தி வைத்துள்ளான்.[49] ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட தவணைவரை இயங்கிக் கொண்டிருக்கின்றது.[50] மேலும், நீங்கள் செய்கின்றவற்றை, அல்லாஹ் நன்கு புரிந்தவன் (என்பதையும் நீங்கள் அறியவில்லையா?)

இவற்றிற்குக் காரணம் அல்லாஹ்தான் சத்தியமானவன்[51] என்பதும், அவனைத் தவிர இவர்கள் வணங்குபவை அனைத்தும் அசத்தியமானவை[52] என்பதும், மேலும், அல்லாஹ்வே உயர்ந்தவனாகவும் மேலானவனாகவும்[53] இருக்கின்றான் என்பதுமேயாகும்!

நீங்கள் காணவில்லையா? அல்லாஹ்வின் அருளினால் கப்பல் கடலில் செல்கின்றது; அவன் தன்னுடைய சான்றுகளில் சிலவற்றை உங்களுக்குக் காண்பிக்க வேண்டும் என்பதற்காக![54] மேலும், பொறுமையாளராகவும், நன்றி செலுத்துபவராகவும் உள்ள ஒவ்வொருவருக்கும் உண்மையில் இதில் அநேக சான்றுகள் உள்ளன.[55]

**● அத்தியாயம் 31 லுக்மான் ● திருவசனங்கள் : 29-31**

**49.** இரவும் பகலும் முறையாக ஓர் ஒழுங்கமைப்பில் தொடர்ந்து இயங்குவதே கூட எதனைத் தெளிவுபடுத்துகிறது எனில், சூரியனும் சந்திரனும் முழுமையாக ஓர் ஒழுங்கமைப்பில் கட்டுண்டு கிடக்கிறது என்பதைத்தான் காட்டுகிறது. சூரியனும் சந்திரனும் மட்டும் இங்கு கூறப்பட்டிருப்பதன் காரணம் இதுதான்: இவ்விரண்டும் வெளிப்படையான கோளங்களாக உள்ளன. பண்டைய காலம் முதற்கொண்டு மனிதன் அவ்விரண்டையும் வணக்கத்திற்குரியவையாக ஆக்கி வந்து கொண்டிருக்கின்றான். இன்றைக்கும்கூட பெரும்பாலான மனிதர்கள் அவற்றை தேவதைகள் என்றுதான் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். இதைத் தவிர உண்மையில் இந்தப் பூமி உள்ளிட்ட பேரண்டத்தின் அனைத்துத் தாரகைகளையும் கோளங்களையும் உயர்வு மிக்க அல்லாஹ் ஓர் உறுதியான ஒழுங்கமைப்பில் பிணைத்து வைத்திருக்கின்றான். அதிலிருந்து ஒரு மயிரிழை அளவுகூட அவை விலகிச் செல்வதில்லை.

**50.** ஒவ்வொரு பொருளுக்கும் எந்த ஓர் ஆயுள் காலம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்தக் காலம் வரையில்தான் ஒவ்வொன்றும் இயங்கிக்கொண்டிருக்கிறது. சூரியன் என்றாலும் சரி, சந்திரன் என்றாலும் சரி, பேரண்டத்தின் எந்த ஒரு தாரகை என்றாலும் கோளம் என்றாலும் சரியே, அவற்றில் எது ஒன்றும் ஆதி அந்தம் இல்லாதவை அல்ல. ஒவ்வொன்றுக்கும் தொடக்க

*29 ஆம் பக்கம் பார்க்க...*

**● தஃப்ஹீமுல் குர்ஆன் ● மௌலானா மௌதூதி (ரஹ்) ● தமிழில் : மௌலவி K.J. மஸ்தான் அலீ பாகவி**

# அருள்வளங்களின் மாதம்

நபி(ஸல்) அவர்கள் ஷஅபான் மாதத்தின் கடைசி நாளில் ஓர் உரை நிகழ்த்தினார்கள். ‘உங்கள் முன்னால் கண்ணியமும் மாண்பும் நிறைந்த மாதம் ஒன்று வரவிருக்கின்றது. இந்த மாதம் மிகவும் அருள்வளங்கள் நிறைந்த மாதமாகும். இது எப்படிப்பட்ட மாதமெனில் இந்த மாதத்தின் ஓரிரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறப்பு வாய்ந்ததாகும். அல்லாஹ் இந்த மாதத்தில் உங்கள் மீது நோன்பைக் கடமையாக்கி இருக்கின்றான். மேலும் அதன் இரவுகளில் தொழப்படுகின்ற தொழுகைகளை நஃபில் ஆக ஆக்கியிருக்கின்றான்.

எவர் இந்த மாதத்தில் ஏதேனுமோர் நல்லறத்தைச் செய்து இறைவனின் நெருக்கத்தைப் பெற விரும்புகின்றாரோ அவர் மற்ற நாள்களில் ஃபர்ளான கடமைகளைச் செய்தவருக்கு இணையானவர் ஆவார். மேலும் இந்த மாதத்தில் ஃபர்ளான கடமைகளை நிறைவேற்றியவரின் நிலைமை, மற்ற நாள்களில் எழுபது ஃபர்ளான கடமைகளை நிறைவேற்றியவருக்கு இணை யானவராக இருப்பார்.

ரமளான் மாதம் பொறுமையின் மாதமாகும். பொறுமையின் கூலி சுவனம் ஆகும். இது ஒருவர் மற்றவருடன் பரிவோடும் கருணையோடும் நடந்துகொள்வதற்கான மாதம் ஆகும். இது எத்தகைய மாதமெனில் இந்த மாதத்தில் நம்பிக்கையாளர்களுக்கான அருள்வளம் அதிகரிக்கப்பட்டு விடுகின்றது.

இந்த நாளில் ஒரு நோன்பாளி நோன்பு துறப்பதற்கான ஏற்பாடுகளை ஒருவர் செய்து தருவா ரெனில் அவருடைய அந்த நல்லறம் அவருடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு வழி வகுக்கும். மேலும் அவருடைய கழுத்தை நரக நெருப்பிலிருந்து பாதுகாப்பதற்கும் அது வழி வகுக்கும். அந்த நோன்பாளி நோன்பு நோற்றதால் என்ன நன்மையைப் பெறுகின்றாரோ அதே அளவு நன்மை இவருக்கும் கிடைக்கும். அதனால் நோன்பாளிக்குக் கிடைக்கிற நன்மையில் எந்தக் குறைவும் ஏற்படாது.

ஸல்மான்(ரலி) கூறுகின்றார்: (நபித்தோழர்களாகிய) நாங்கள் கேட்டோம்: ‘இறைவனின் தூதரே! இவ்வாறு நோன்பாளி நோன்பு துறப்பதற்கான ஏற்பாடு செய்கின்ற அளவுக்கு நம் எல்லோருக்கும் வசதி இல்லையே!’

நபிகளார்(ஸல்) பதிலளித்தார்கள்: ‘அல்லாஹ் இந்த நன்மையை ஒரு மிடறு பால் கொடுத்து அல்லது ஒரு துண்டு பேரீச்சம் பழம் கொடுத்து அல்லது ஒரு மிடறு தண்ணீர் தந்து நோன்பு துறக்க உதவுபவருக்கும் தருவான். மேலும் எவர் நோன்பாளிக்கு வயிறார உணவளிக்கின்றாரோ அல்லாஹ் அவருக்கு என்னுடைய தடாகத்திலிருந்து தண்ணீர் புகட்டுவான். (அந்தத் தடாகத்திலிருந்து) தண்ணீர் அருந்திய பிறகு அவருக்குத் தாகமே எடுக்காது. அந்த நிலை யில் அவர் சுவனத்துக்குச் சென்றடைந்துவிடுவார்.’

மேலும் இது எத்தகைய மாதமெனில் இதன் தொடக்கத்தில் ரஹ்மத் - கருணை, கிருபை இருக்கின்றது. இதன் நடுவில் மன்னிப்பு இருக்கின்றது. இதன் இறுதியில் நரகத்திலிருந்து விடுதலை உள்ளது. எவர் ரமளான் மாதத்தில் தம்முடைய அடிமையிடம் சிரமமில்லாத வகையில் எளிதான வேலையை வாங்கினாரோ அல்லாஹ் அவரை மன்னித்துவிடுவான். மேலும் நரகத்திலிருந்து விடுதலை அளித்துவிடுவான்.’

*அறிவிப்பாளர் : ஸல்மான் ஃபார்சி(ரலி) நூல் : பைஹகி*

ரமளான் மாதமே அருள்வளங்களின் மாதமாகும். ரமளானின் சிறப்புகள், தனித் தன்மைகள் குறித்து நபி(ஸல்) அவர்கள் பல விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஷபே கத்ரு குறித்து ஆயிரம் மாதங்களை விடச் சிறந்த இரவு என்றும் அறிவித் திருக்கின்றார்கள். அந்த அருள்வளம் நிறைந்த இரவில்தான் குர்ஆன் அருளப்படத்

**நபிமொழி விளக்கம் ★ மௌலானா முஹம்மத் ஃபாரூக்கான் ★ தமிழில் : அபூ ஹானியா**

தொடங்கியது. அந்த இரவு தனித்துவமும் முக்கியத்துவமும் நிறைந்த இரவாகும். அறிவு, ஞானம் தொடர்பான விவகாரங்கள் குறித்தும் உலகத்தின் வெற்றியும் வளமும் இருக்கின்ற விவகாரங்கள் குறித்தும் தீர்மானிக் கப்படுகின்ற இரவும் அதுதான்.

குர்ஆன் அருளப்படத் தொடங்கிய இரவு சாதாரணமான இரவாக இருக்க முடியாது. ஆயிரம் மாதங்களைக் காட்டிலும் சிறப்பான இரவுதான் அது. ஆயிரம் மாதங்களில் நடக் காத பணி - மனிதனுக்கு வளத்தையும் நலத்தையும் சேர்க்கின்ற பணி - இந்த இரவில் நடந்தது. இந்த இரவில் வானவர்களும் ரூஹுல் அமீனும் தம்முடைய இறைவனின் கட்டளையுடன் பூமியில் இறங்குகின்றார்கள். (பார்க்க : அத்துகான் 3-5)

ரமளான் மாதத்தில் பகலில் நோன்பு நோற் பது கடமையாகும். இரவில் தராவீஹ் தொழுகை களை நிறைவேற்றுவதும் அதிகமதிகமாக இறை வனின் அவையில் நிற்பதும் ஃபர்ளான கடமை இல்லையெனினும் அது இறைவனுக்கு மிகவும் விருப்பமான அறம் ஆகும்.

உலகம் முழுவதும் முஸ்லிம்கள் அனை வரும் ஒன்றாக இந்த மாதத்தில் நோன்பு நோற் கின்றார்கள். இவ்வாறாக ஒரு தனிப்பட்ட வழிபாடு கூட்டு வழிபாடாக வடிவெடுத்துவிடு கின்றது. மக்கள் தனித்தனியாக நோன்பு நோற் பதில் கிடைக்கின்ற ஆன்மிக, தார்மிக பலன் களும் நன்மைகளும் எல்லோரும் ஒன்று சேர்ந்து நோன்பு நோற்கும்போது கணக்கிட இயலாத அளவுக்குப் பன்மடங்கு கூடிவிடுகின்றன.

ரமளான் சமூகச் சூழலையே மாற்றி யமைத்து விடுகின்றது. நன்மைகள், நல் லறங்கள், மார்க்கப் பேணுதலான அறங்கள் நிறைந்ததாக சூழலே மாறிவிடுகின்றது. மனிதன் நோன்பு நோற்றுள்ள நிலையில் பாவங்களிலிருந்து முற்றாக விலகிவிடு கின்றான். வெட்கப்படுகின்றான். நன்மை களிலும் நல்லறங்களிலும் ஈடுபடுவதில் மக்கள் போட்டி போடுகின்றார்கள்.

ஏழை எளியவர்களின் துயர் துடைப்பதில் பேரார்வம் கொள்கின்றார்கள். நன்மைகளின் தாக்கங்களும் அதிகரித்துவிடுகின்றன. பரக் கத் எனும் அருள்வளம் கூடிவிடுகின்றது. ஏனெனில் இந்த மாதத்தில் மேற்கொள் ளப்படுகின்ற எந்தவொரு நல்லறத்துக்கும் கணக்கிட முடியாத அளவுக்கு நற்கூலி வழங்கு வதாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.

இந்த மாதத்தில் மனிதன் பசி, தாகம் ஆகிய வற்றின் சிரமங்களைச் சகித்துக் கொண்டு தன்னுடைய இச்சைகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு இறைவனின் கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு வாழ்வதில் தனிக் கவனம் செலுத்துகின்றான். இறைவனின் பாதையில் நிலைத்திருப்பதற்குத் தேவையான பொறு மையையும் நிலைகுலையாத பண்பையும் தனக்குள் வளர்த்துக்கொள்வதற்கும், சத்தியப் பாதையில் எத்துணை எத்துணை துன்பங்களும் இடர்ப்பாடுகளும் வந்தாலும் அவற்றை எதிர் கொள்கின்ற பண்பை உருவாக்கிக் கொள் வதற்கும் அவன் கடுமையாக முயல்கின்றான்.

பசியும் தாகமும் மிகைக்கின்றபோது பட் டினிக்கும் வறுமைக்கும் ஆளாகின்ற மனிதர் களின் தவிப்பை உணர வேண்டும். நபி(ஸல்) அவர்கள் அளவிட முடியாத அளவுக்குக் கனிவும் பரிவும் நிறைந்தவர்களாக ஆகிவிடு வார்கள். யாசிப்பவர் எவரும் வெறுங்கையோடு திரும்ப மாட்டார். கைதாகி இருந்தவர்களும் விடுவிக்கப்பட்டு விடுவார்கள்.

இந்த மாதம் நன்மைகளின் வசந்தத்தைக் கொண்டு வருகின்றது. இதன் காரணமாக ஒட்டுமொத்த சமூகச் சூழலிலும் இறைவ னின் தனிப்பெருங்கருணையும் கிருபையும் நிறைந்துவிடுகின்றது.

இந்த மாதத்தின் கடைசி நாள்களை அடை கின்ற வேளையில் இந்த அருள்வளம் மிக்க மாதத்திலிருந்து பயனீட்டிக் கொண்டவர் களின் வாழ்வில் எந்த அளவுக்குப் புத்துணர்வு மேலோங்கிவிடுகின்றது எனில், அவர்கள் இறைவனின் தரப்பிலிருந்து ஈடேற்றம் பெற்றவர்களாக அறிவிக்கப்படுவதற்கான தகுதியை அடைந்துவிடுகின்றார்கள். இறை வன் அவர்களை நரகத்திலிருந்து விடுதலை செய்வதற்கான தீர்மானத்தை எடுத்துவிடு கின்றான்.

*26 ஆம் பக்கத் தொடர்ச்சி...*

நிலை என்று உண்டு. அதற்கு முன் அது உருவாகியிருக்கவில்லை. முடிவு நேரம் என்று ஒன்று உண்டு. அதன் பிறகு அது இருக்கப்போவதில்லை. இப்படி எடுத் துரைப்பதன் நோக்கம் இதனைச் சொல்லிக் காட்டுவதுதான். (இல்லாமையிலிருந்து) இவ்வாறு புதிதாக உருவாகியுள்ள, எவ்வித சக்தியும் இல்லாத பொருள்கள் வணக் கத்திற்குரிய கடவுளாக எவ்வாறு ஆக முடியும்!

**51.** அவன் முழுமையான சுயதிகாரம் உள்ள உண்மையான செயற்கர்த்தா ஆவான், படைத்தல், திட்டமிடுதல் தொடர்பான அதிகாரங்களின் அசல் உரிமையாளன் ஆவான்.

**52.** அவை அனைத்தும் உங்களின் வெறும் கற்பனை மூலம் உருவான கடவுளர்தாம். நீங்களாகவே இவ்வாறு ஏற்படுத்திக்கொண்டீர்கள்: அதாவது இன்ன திருவாளருக்கு இறைமையில் ஒரு பங்கு உண்டு. இன்ன ஹஜ்ரத் - சிறப்பாளருக்கு துன்பங்களை அகற்றும் தேவைகளை நிறைவேற்றும் அதி காரங்கள் கிடைத்திருக்கின்றன என்று ஆக்கி வைத்திருக்கிறீர்கள். உண்மையாகப் பார்த்தால் அவர்களில் எந்தத் திருவாள ரானாலும் சரியே, அவரால் எதையும் படைக்க முடியாது.

**53.** அல்லாஹ் ஒருவன்தான் ஒவ் வொன்றை விடவும் உயர்ந்தவன், மேலானவன். பிற அனைத்தும் அவனது திருமுன் அடங்கிக் கிடப்பவைதான். அல்லாஹ் ஒருவன் மட்டும்தான் ஒவ் வொன்றை விடவும் மேன்மையானவன். பிற அனைத்தும் அவனது திருமுன் சிறுமைப்பட்டவைதான்.

**54.** அத்தகைய சான்றுகளின் மூலம் இந்த விளக்கம் கிடைக்கிறது: அதிகாரங்கள் முழுவதும் உயர்வுமிக்க அல்லாஹ்வின் கையிலேயே உள்ளன. மனிதன் மிக மிக உறுதியான கப்பலை, கடல் பயணத்திற்கு மிக மிகப் பொருத்தமான கப்பலை உருவாக்கி வைத்திருக்கலாம். மாலுமி தொடர்பான படிப்புக் கலையில் - அதனுடன் தொடர்புள்ள தகவல்கள், அனுபவங்களில் எவ்வளவோ திறமை களை மனிதன் வளர்த்துக் கொண்டிருக் கலாம்.

ஆனால் கடலில் எத்தனை பயங்கரமான ஆற்றல்களை அவன் எதிர்கொள்ள நேரிடு கிறது எனில், அவற்றைச் சமாளிப்பதில் தன்னுடைய திட்டங்கள், முயற்சி களின் பின்புலத்தின் மூலம் மட்டும் அவனால் நல்லவிதமாகப் பயணம் செய்ய முடியாது. உயர்வுமிக்க அல்லாஹ்வின் கிருபையும் அனுகூலமாக இருந்து அரவணைத்துக் கொள்ளாத வரையில் அவன் கரை சேர முடியாது! இறைவனின் கருணைப் பார்வை ஒருமுறை சுழன்றாலே மனிதனுக்குப் புரிந்துவிடுகிறது - அதா வது அவனுடைய எத்தனை எத்தனை சாதனங்கள், கருவிகள், கலைத்திறன்கள் தண்ணீரில் உள்ளன என்பது புரிந்து விடுகிறது.

இவ்வாறே ஒரு மனிதன் அமைதி, நிம்மதியின் சூழ்நிலையில் மிகக் கடுமையான நாத்திகனாக, பிடிவாதமிக்க சிலை வணங்கியாக இருக்கலாம். ஆனால் கடலின் புயல் சுழற்சியில் அவனது கப்பல் தள்ளாடத் தொடங்கும் பொழுது நாத்திக வாதிக்குக்கூட இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்பது புரிந்துவிடுகிறது. இறைவன் ஒரே ஒருவன்தான் எனும் உண்மையை சிலை வணங்கிகூட அறிந்து கொள்கின்றான்.

**55.** இவ்விரு பண்புகளும் அமையப் பெறும் மக்கள் இந்தச் சான்றுகளின் மூலம்

உண்மையை அறிந்து கொள்ளும் பொழுது நிரந்தரமாக ஓரிறைக் கொள்கைக்கான பாடத்தைப் பெற்றுக்கொண்டு அதன் மீது உறுதியாக நிலைத்து நிற்கிறார்கள்.

முதல் பண்பு: ஸப்பார் (பெரிதும் பொறுமையை மேற்கொள்பவர்) என்பது. அவர்களின் இயல்பில் சூழ்நிலைக்குத் தக்கவாறு மாறும் தன்மை இருக்கக்கூடாது. மாறாக நிலைகுலையாமை இருக்க வேண்டும். விருப்பு, வெறுப்பு, கடுமை, நளினம், நல்லது, கெட்டது எனும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் ஒரு நல்ல கொள்கையின் மீது நிலைத்திருக்க வேண்டும். எந்த ஒரு பலவீனமும் அவர்களிடம் இருக்கக்கூடாது. துன்பம் வந்துவிட்டால் இறைவனின் திருமுன் மன்றாடிக் கேட்பது. இன்பம் வந்தவுடனேயே அனைத்தையும் மறந்துபோவது எனும் பலவீனம் இருக்கக்கூடாது. அல்லது அதற்கு நேர்மாறாக நல்ல சூழ்நிலைகளில் இறையச்சத்தை மேற்கொள்கிறார்கள். துன்பங்கள் லேசாகச் சீண்டியதுமே இறைவனைத் திட்ட ஆரம்பித்து விடுகிறார்கள் எனும் பலவீனம் இருக்கக்கூடாது.

இரண்டாவது பண்பு: ஷகூர் (பெரிதும் நன்றி செலுத்துபவர்) என்பது. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்பவராக, நன்றி மறந்தவராக இருக்கக்கூடாது. மாறாக இறையருட் கொடையின் மதிப்பை உணர்ந்தவராக இருக்க வேண்டும். அருட்கொடை வழங்கிய இறைவனுக்கு நிரந்தரமாக நன்றி செலுத்தும் ஆர்வத்துடிப்பையும் மதிப்பு உணர்வையும் தங்களின் மனத்தில் பசுமையாக வைத்திருக்க வேண்டும்.

(தொடரும்)


**அல்-அமீன் எத்தீம் கானா**
(இளைஞர் நீதிச்சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்)

அல்-அமீன் நகர், கோ.புதூர், மதுரை-7
செல் : 98420-21786, 97894-89494

**எத்தீம் பிள்ளைகளை ஆதரியுங்கள்**

- நமது எத்தீம்கானா **1960ம்** ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.
- **150க்கும் மேற்பட்ட எத்தீம் பிள்ளைகள் பயின்று வருகின்றனர்.**
- அவர்களுக்கு சுகாதாரமிக்க இருப்பிடமும், நல் உணவும், உடையும் வழங்கி முழுமையான தீன் கல்வியுடன், முதல் வகுப்பிலிருந்து பட்ட மேற்படிப்பு வரை முற்றிலும் இலவசமாக கற்றுத்தரப்படுகிறது.
- மேலும் தையற்கல்வி, கம்ப்யூட்டர், டிரைவிங் போன்றவையும் கற்றுத்தரப்படுகிறது.
- இன்ஷா அல்லாஹ், படித்து முடிக்கும் அத்தனை பேருக்கும் வேலைவாய்ப்பும் ஏற்படுத்தி தரப்படுகிறது.
- **அவர்களின் கல்விக்கும், உணவுக்கும் உயர்வுக்கும் நீங்கள் வழங்கும் ஜக்காத்தே மூலதனம்.**
- எவ்வித நிரந்தர வருமானமும் இல்லாத நமது எத்தீம்கானாவுக்கு உங்கள் ஜக்காத்தை பெருமளவில் வழங்கி உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் ஜக்காத் / சதகா / குர்பானி போன்ற உதவிகளை **AL-AMEEN ETHEEM KHANA** என்ற பெயருக்கு DD / செக் மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பி எத்தீம் பிள்ளைகளின் வாழ்வை மேம்படுத்த உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நிர்வாகி
அல்-அமீன் எத்தீம் கானா
அல்-அமீன் நகர், K.புதூர்
மதுரை-7. செல் : 98420 21786
97894 89494

Our A/c. No.435401010010013
IFSC Code : UBIN0803499
Union Bank of India
South Masi Street, Madurai-1

இன்ஷா அல்லாஹ்,
பேங்கில் பணம் செலுத்தியதும் தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நமது எத்தீம்கானா சார்பாக வசூல் செய்ய எப்போதும் யாரையும் நியமிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


TRADITIONAL TRUST
LKS
SINCE 1925
ஓர் உயிரை வாழ வைப்பவன்
மக்கள் அனைவரையும்
வாழ வைப்பவன் போன்றவனாவான்.
கதீட்ரல் ரோடு
L.K.S.
கோல்டு பேரடைஸ்
35. கதீட்ரல் ரோடு, சென்னை - 600 086.
போன் : (044) 2811 3611
பாரம்பரிய நம்பிக்கை... 1925 முதல்!



# பிபிசி ஆவணப்படம்:
# ஒரு விமர்சனப் பார்வை

**- நாகூர் ரிஸ்வான்**

அண்மையில் குஜராத் இனப்படுகொலை தொடர்பாக பிபிசி வெளியிட்ட 'India: The Modi Question' ஆவணப்படம் மிகப் பெரும் விவாதப் பொருளானதையும், அதற்கு இந்திய அரசு தடை விதித்ததையும் நாம் அறிவோம். ஒரு பக்கம் அதை நரேந்திர மோடி ஆதரவு வட்டாரங்கள் கடுமையாக எதிர்த்தன. மறுபக்கம் இந்துத்துவ எதிர்ப்பாளர்களாக அறியப்படும் பல தரப்பினர் அதைப் பெரிதும் வரவேற்றனர். அந்தப் படம் அதற்குரிய வகையில் விமர்சனப் பூர்வமாக அணுகப்பட்டதா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கும்.

குஜராத் இனப்படுகொலை உலகெங்கும் பெரும் விவாதத்தை ஏற்படுத்தியதும், சில முக்கிய விவரங்களைப் பதிவு செய்ததும் பிபிசி ஆவணப்படத்திலுள்ள நேர்மறையான அம்சங்கள் என்பதில் ஐயமில்லை. இந்தக் கட்டுரை அந்தப் படத்தை மற்றொரு கோணத்தில் அணுகுகிறது. அதிலுள்ள சிக்கல்களைச் சற்று கூராய்வு செய்கிறது. மானுடவியல் பேராசிரியர் இர்ஃபான் அஹ்மது மக்தூப் மீடியா இணையதளத்துக்கு எழுதிய கட்டுரையைத் தழுவி எழுதப்பட்ட கட்டுரை இது.

## காலனியத்தின் நீட்சி!

பிபிசி ஆவணப்படம் குறித்து புகார் தெரிவித்த இந்திய அரசு, அதை ‘காலனிய மனநிலையின் தொடர்ச்சி’ என்று குற்றம் சாட்டியது. வேடிக்கை என்னவென்றால், அதைத் தடை செய்ய அரசு பிரயோகித்த சட்டமே ஒருவிதத்தில் காலனியத்தின் நீட்சி தான். ‘இந்திய இறையாண்மை, ஒருமைப் பாட்டின் நலன்களுக்கு’, ‘அரசின் பாது காப்புக்கு’ எதிரானதாகக் கொள்ளப்பட்டு தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் மூலம் அந்தப் படத்துக்குத் தடை விதிக்கப் பட்டது.

பிரிட்டிஷார் காலத்தில் இந்தியப் பாதுகாப்புச் சட்டம்(1915) கொண்டுவரப் பட்டது. இதன் நீட்சியாக அமைந்ததுதான் ரவ்லட் சட்டம் (1919). இவ்விரு சட்டங்களும் ‘அரசின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்’ தரும் செயல்பாடுகளைக் குற்றமாக்கின. இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய அம்சம் என்ன வெனில், மோகன்தாஸ் காந்தியும், இந்தியா வின் முதல் பிரதமருமான ஜவஹர்லால் நேரு வும் மேற்கு வங்க பாதுகாப்புச் சட்டம்(1948) போன்ற காலனியச் சட்டங்களை விமர்சன மின்றி அங்கீகரித்தனர். சொல்லப்போனால் பிரிட்டிஷாரையே ஒருபடி விஞ்சும் அளவுக்கு நேரு போனார்.

மேற்கூறியது போல், 'அரசின் பாதுகாப்புக்கு' எதிரான நடவடிக்கைகள் குற்றப்படுத்தப்பட்டு வந்த நிலையில், அதன் எல்லையை இன்னும் விரிவாக்கி 'அரசினுடைய பாதுகாப்பின் நலன்களுக்கு' எதிரான நடவடிக்கைகள் குற்றமாக்கப்பட்டன. அரசமைப்பில் இப்படியான திருத்தத்தை நேரு கொண்டு வந்ததன் விளைவு எந்தச் செயலையும் சட்ட விரோதமாக அறிவிக்கலாம் எனும் படுமோசமான நிலையை ஏற்படுத்தியது.

## பாதிக்கப்பட்டோர் மீதே பழிசுமத்துதல்

பாஜகவின் கண்ணோட்டத்துக்கும், பிபிசி ஆவணப்படத்துக்கும் மத்தியில் பல ஒற்றுமைகள் இருக்கின்றன. படத்தின் முதல் பாகத் தொடக்கத்தில் வரும் குரல், 'ஒரு முஸ்லிம் குழுவால் இந்துச் செயல்பாட்டாளர்கள் பயணித்த இரயில் கொளுத்தப்பட்டதில் 57 பேர் இறந்தனர்' என்று குறிப்பிடுகிறது. கோத்ராவில் எரிக்கப்பட்ட இரயிலுக்கு அருகில் நின்று ஜில் மெக்கிவிரிங் கூறுகிறார்: 'சில பகுதிகளில் (இந்துக்களிடையே) நிலவும் துயரமும் கோபமும் (முஸ்லிம்களுக்கு எதிரான) வன்முறையைக் கிளர்ந்தெழச் செய்திருக்கிறது'.

இதைக் காண்போர் பிபிசியின் நிலைப்பாட்டில் வெளிப்படும் சார்புநிலையை மிகத் தெளிவாக உணர முடியும். படத்தில் ஒலிக்கும் குரல் 57 பேர் உயிரிழந்ததற்கு முஸ்லிம்களைப் பழிசுமத்துகிறது. எந்த ஆதாரமும் இல்லாமல் இப்படி முன்வைப்பதன் மூலம் முஸ்லிம்கள் பாதிப்பை ஏற்படுத்தியோராகவும், இந்துக்கள் பாதிக்கப்பட்டோராகவும் அடையாளப்படுத்தப்படுகின்றனர். இந்தக் கண்ணோட்டத்தை படத்தின் அடுத்தடுத்த பகுதிகளும் உறுதி செய்கின்றன. குஜராத்தில் மூன்று நாள்கள் நீடித்த முஸ்லிம்களுக்கு எதிரான கலவரத்தில் சுமார் 2000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அந்தக் குரூரச் சம்பவத்தைதான் 'துயரத்தாலும் கோபத்தாலும் வெடித்த' ஒன்று என்கிறது பிபிசி.

இரயிலில் பயணித்தவர்களின் இறப்பு ஒரு முஸ்லிம் குழுவால் நேர்ந்ததாகக் குறிப்பிடுவதன் மூலம் அது திட்டமிட்ட, ஒருங்கிணைந்த முயற்சி என நிறுவும் ஆவணப்படம், முஸ்லிம்கள் மீதான வன்முறை வெறியாட்டம் எதிர்பாரா விதமாகவும் திட்டமிடப்படாமலும் மேலெழுந்ததாகத் தெரிவிக்கிறது. அந்த இடத்தில் பிபிசி 'Erupt' எனும் சொல்லைக் கையாண்டுள்ளது. ஈறுகள் வழியாகப் பற்கள் முளைப்பதுபோல தன்னியல்பாகவும் திட்டமிடப்படாமலும் நடைபெறும் செயல்முறையை இந்தச் சொல் குறிப்பதாய் ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி கூறுகிறது. உண்மையில், குஜராத் படுகொலைகள் தன்னியல்பாகவோ திட்டமிடப்படாமலோ நடைபெறவில்லை என்பது வெள்ளிடைமலை.

இந்த ஆவணப்படம் கோத்ராவில் 57 பேர் இறந்ததற்கு முஸ்லிம்களைக் காரணமாக்குவதும், அந்த நிகழ்வின் விளைவாகவே குஜராத் படுகொலைகள் நிகழ்ந்ததாகக் குறிப்பிடுவதும் தவறானது மட்டுமல்ல, மிகுந்த பக்கச்சார்பானது. இன்னும் சொல்லப்போனால், பாஜக அல்லது இந்து தேசியவாதிகளின் மொழியை ஒத்தது. முன்பொரு சந்தர்ப்பத்தில் குஜராத் சம்பவத்தை நியாயப்படுத்திப் பேசிய நரேந்திர மோடியின் வார்த்தைகள் நினைவுக்குரியவை: 'முன்னதாக, (கோத்ராவில்) இந்த ஆட்கள் (முஸ்லிம்கள்) பெண் ஆசிரியைகளைக் கொன்றார்கள். அவர்கள் இந்தக் கொடூரக் குற்றத்தைச் செய்ததற்கான எதிர்வினைதான் இப்போது நடந்துகொண்டிருக்கிறது'.

பொதுவாகவே 'கோத்ராவுக்குப் பிந்தைய கலவரங்கள்' எனும் பதப்பிரயோகம் மிகப் பரவலாகக் கையாளப்பட்டது. பாஜக மட்டுமின்றி, பெரும்பாலான ஊடகங்கள் இதே கதையாடலைத்தான் வலுவாகக் கட்டமைத்தன. இதன் மூலம், முஸ்லிம்கள் தங்களுக்கு எதிரான வன்முறைக்குத் தாங்களே காரணமாகவும் தொடக்கமாகவும் அமைந்தார்கள் எனும் சித்திரம் ஏற்படுத்தப்பட்டது.

பிபிசி ஆவணப்படத்தின் இரண்டாவது பகுதி, முஸ்லிம்களை காட்டுமிராண்டித் தனமாய் அடித்துக் கொன்ற இந்துக்களைக் கொலையாளிகள் என்றோ குற்றவாளிகள் என்றோ குறிப்பிடவில்லை. மாறாக, 'பசுக் காவலர்கள்' என்கிறது. அவர்களைக் கண்ணி யப்படுத்தும் விதமாகவே இந்தச் சொற் பிரயோகத்தை சங்பரிவார சக்திகள் பர வலாக்கின. வரலாற்று ரீதியில் பார்த்தால், இந்தச் சொல் காலனிய இந்தியாவில் முஸ்லிம்களுக்கு எதிரான 'பசுப் பாதுகாப்பு' இயக்கத்தால் பயன்படுத்தப்பட்டது.

இந்தியாவில் நடைபெறும் கும்பல் படு கொலைகள் போன்றவற்றுக்குப் பின்னால் அரசியல்வாதிகளின் ஆதரவு இருப்பதை சரியாகப் பதிவு செய்யும் பிபிசி, அந்த விவகாரத்தை 'இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையிலான பகைமை' என்று வர் ணிப்பது தவறானது, தன்முரண்பாடானது.

## வன்முறை குறித்த காலனியக் கண்ணோட்டமும் இஸ்லாமிய வெறுப்பும்

இஹ்சான் ஜாஃப்ரி உள்ளிட்ட 69 முஸ்லிம்கள் கொல்லப்பட்ட கோர நிகழ்வான குல்பர்க் சொசைட்டி படுகொலை தொடர்பாக மோடியிடம் தனியார் தொலைக்காட்சி கேள்வி எழுப்பியபோது, வினைக்கு எதிர்வினையாக அது அமைந்ததாக அவர் சொன்னார். கொடுமை என்னவென்றால் அதை உச்ச நீதிமன்றம் நியமித்த சிறப்புப் புலனாய்வுக் குழு(எஸ்ஐடி) அங்கீகரித்தது.



இந்த வினை-எதிர்வினை வாதத்துக்குச் சட்டப்பூர்வ அங்கீகாரமும் கிடைத்தது. கோத்ரா இரயில் நிலையத்தில் தாக்குதல் நடத்தியதாகக் கூறி பலரை தீவிரவாதத் தடுப்புச் சட்டத்திலும், முஸ்லிம்கள் மீது படுகொலைகளை நிகழ்த்திய குற்றவாளிகள் இந்திய தண்டனைச் சட்டத்தின் அடிப் படையிலும் கையாளப்பட்டனர். இப்படி பாரபட்சம் காட்டுவது, ஒரு சாராரை ஒரு விதமான சட்டங்களைக் கொண்டும், மற் றொரு சாராரை வேறு விதமாகவும் அணுகு வது காலனிய மனஅமைப்பின் வெளிப்பாடே அன்றி வேறில்லை.

சிப்பாய்ப் புரட்சி என்று அழைக்கப்படும் பிரிட்டிஷாருக்கு எதிராக 1857ஆம் ஆண்டு நடைபெற்ற காலனிய எதிர்ப்புப் போர் தோல்வியடைந்த சமயத்தில், கீழைத்தேய வியலாளர் W.W.ஹண்டர் முஸ்லிம்களை 'மதவெறியர்கள்' என்று சித்திரித்தார். அவரைப் பொறுத்தவரை, முஸ்லிம்களின் எதிர்ப்புக்குக் காரணம் அவர்களின் மதவெறி தான். காலனியத்துக்குப் பிந்தைய இந்திய அதிகார வர்க்கத்தினர் கீழைத்தேய அறிவை விரும்பியதுடன், அதை அப்படியே உள் வாங்கிக் கொண்டனர். இந்தப் பின்னணி யில், 'அமைதியான' இந்துக்களால் வன் முறை முன்னெடுக்கப்படுவதற்கு 'தற்காப்பு' காரணமே எப்போதும் இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள்.

9/11க்குப் பிந்தைய சட்ட அரசியலை ஆராயும் மானுடவியலாளர் ஜூலியா எக்கர்ட் கூறுகிறார்: 'இந்தியச் சட்டத்தில் இரட்டை நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து அல்லது இருவேறு சட்டங்களைக் கொண்டு முஸ்லிம்களின் போராட்டத்தையும் வன் முறையையும் தீவிரவாதம் என்பதாகவும், இந்துக்களின் வன்முறை 'இயல்பான எதிர் வினை' அல்லது எதேச்சையாக வெடித்த ஒன்று என்பதாகவும் தீர்மானிக்கப்படும் சூழல் வளர்ந்து வருவதைக் காண முடிகிறது'.

இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம், இஸ்லாமோஃபோபியா அதிகரித்த பின்னணி யில் உருவான தீவிரவாத எதிர்ப்பு நடவடிக்

கைகள் குறித்து பிபிசி ஆவணப்படம் மௌனம் காக்கிறது. 9/11க்குப் பிந்தைய இந்திய, சர்வதேச அரசியல் மாற்றங்களை நாம் அறிவோம். தீவிரவாதத்துக்கு எதிரான உலகளாவிய போர் என்று அறிவிக்கப்பட்டதன் பின்னணியில் மோடியின் அரசியல் வளர்ச்சி வேகமெடுத்தது. அமெரிக்காவில் இரட்டைக் கோபுரம் தாக்கப்பட்டபோது, அவர் பாஜக பொதுச் செயலாளராக இருந்தார். அப்போது ஒரு தொலைக்காட்சியில் அவர் இஸ்லாத்தையும் தீவிரவாதத்தையும் தொடர்பு படுத்திப் பேசினார். அவரைப் பொறுத்த வரை, தீவிரவாதம் இஸ்லாத்தில் உள்ளார்ந்து இருப்பதோடு, முழு உலகமும் தீவிரவாதத்தை 1400 ஆண்டுகளாக (நபிகள் நாயகம் காலத்திலிருந்து) பார்த்து வருகிறது என்பது.

பொதுவாக, 9/11க்குப் பிறகான அரசியல் இஸ்லாமோஃபோபியாவையும் தீவிரவாதத்தையுமே மையம் கொண்டிருந்தது. மோடியின் அரசியலும் அப்படித்தான். அதை இந்த ஆவணப்படம் பொருட்படுத்தாமல் தவிர்த்திருப்பதற்கு எந்த நியாயமும் இருக்க முடியாது. சொல்லப்போனால், பிபிசியே பெரிய அளவிலும் இஸ்லாமோஃபோபியாவுக்குப் பங்களித்திருக்கிறது என்பது தனிக்கதை. இஸ்லாமிய நம்பிக்கையின் ஒரு பகுதியாக மோசடி இருக்கிறது என்று விஷம் கக்கிய மெலனி பிலிப்ஸ் போன்ற பல இஸ்லாம் - வெறுப்புத் தொழிலாளர்களுக்கு பிபிசி மேடை அமைத்துக் கொடுத்திருக்கிறது.

மோடி பிரதமராவதற்கு முன்பு, சரியாக 2014 ஏப்ரலில், பிபிசி ரேடியோ 4 தொகுப்பாளர் ரிதுலா ஷா மோடியை ‘கவர்ந்திழுப்பவர்’ என்று வர்ணித்தார். 2014 தேர்தல் பேரணி குறித்து அவர் பேசுகையில், ‘நரேந்திர மோடி வசீகரமான பேச்சாளர். அண்மையில் டெல்லியில் அவர் கலந்துகொண்ட பேரணியில் மக்கள் மிகுந்த கவனத்துடன் இருந்ததோடு, அகண்ட மார்பைக் கொண்ட அந்த மனிதரால் அவர்கள் கிட்டத்தட்ட மெய்மறந்து போயினர்’ என்று குறிப்பிட்டார்.

ரிதுலா ஷா நேயர்களிடம் சொல்லாமல் தவிர்த்த செய்தி என்னவென்றால், மோடியின் பேச்சில் முழுக்க முழுக்க இஸ்லாமிய வெறுப்பு தோய்ந்திருந்தது என்பதையும், அந்தப் பேச்சைக் கேட்டு பார்வையாளர்களிடையே அமர்ந்திருந்த இளம்பெண் முஸ்லிம்களைக் கெட்ட வார்த்தையில் திட்டி, அவர்களைக் கொல்லுங்கள் என்று கொக்கரித்ததையும்தான்.

பிபிசியின் ஆவணப்படத்தில் சில முக்கியமான விஷயங்கள் இடம்பெற்றிருக்கின்றன என்பதை நாம் மறுப்பதற்கில்லை. குஜராத் படுகொலைகள் குறித்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அறிக்கையைச் சுட்டிக்காட்டி பிரிட்டனின் முன்னாள் வெளியுறவுத்துறைச் செயலர் ஜாக் ஸ்ட்ரா: ‘காவல்துறையைப் பின்னுக்கு இழுப்பதிலும், இந்துத் தீவிரவாதிகளை மறைமுகமாக ஊக்குவிப்பதிலும் முதல்வர் மோடி மிகவும் தீவிரமாகப் பங்காற்றியுள்ளார் என்பது அவர் மீதான கடும் குற்றச்சாட்டுகளாகும்’. இப்படிச் சொல்லும் அவர், ‘நாங்கள் இந்தியா உடனான அரசாங்க உறவை முறிக்கப்போவதில்லை’ என்றும் கூறுகிறார். ஜாக் ஸ்ட்ராவின் முந்தைய கருத்தை பிந்தையது அர்த்தமற்றதாய் ஆக்கிவிடுகிறது. ஆக, ஆவணப்படம் எதிர்காலம் குறித்தும் நமக்கு எந்த நம்பிக்கையையும் தரவில்லை.

படத்தின் இறுதிப் பகுதியில் இரு கல்வியாளர்கள் நேர்காணல் செய்யப்பட்டுள்ளார்கள். சீனாவை எதிர்ப்பதற்கு இந்தியாவுடனான உறவு மேற்குலகுக்குத் தேவை என்பதால், இந்தியாவில் அரங்கேறி வரும் முஸ்லிம்களுக்கு எதிரான செயல்பாடுகள் பற்றி மேற்குலகம் காத்திரமாகக் குரலெழுப்புவது சாத்தியமற்ற ஒன்று என்று அவர்கள் குறிப்பிடுகிறார்கள். மேற்குலகின் இந்தச் சார்பு நிலை சற்றும் வியப்புக்குரியதன்று.

பிபிசி வெளியிட்ட இந்த ஆவணப் படத்தை இன்னும் விமர்சனபூர்வமாக அணுகுவதுடன், குஜராத் படுகொலையில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் நிலையிலிருந்து அதைத் தொடர்ச்சியாகவும், அழுத்தமாகவும் பதிவு செய்துகொண்டே இருப்பது நீதியின் மீதும், அறத்தின் மீதும் பற்று கொண்ட அனைவரின் கடமையாகும். ச

# சுவர் வரைந்த சித்திரங்கள்..!

**- டாக்டர் முஹ்யித்தீன் காஜி**

அது ரமளான் மாதத்தின் முதல் நாள்.

தராவீஹ் தொழுதுவிட்டு அறைக்குத் திரும்பிய நான் அறையில் தனியாக அமர்ந்து குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தேன். அதன் இனிமையில் திளைத்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று - சுவரில் சாய்ந்து அமர்ந் திருந்த எனக்கு சுவர் குலுங்குவதைப் போன்று தோன்றியது. நேராக அமர்ந்து கொண்டு குர்ஆன் ஓதுவதைத் தொடர்ந்தேன். இப்போது சுவர் நடுங்குவதாக உணர்ந்தேன். நான் திரும்பிப் பார்த்தேன். சுவர் என்னோடு பேசத் தொடங்கிவிட்டது.

**சுவர் :** எத்தனை எத்தனை இரவுகளாக நான் இதற்காகக் காத்திருந்தேன். என்னோடு தனிமையில் இருக்கின்ற இந்தத் தருணங் களுக்காக, மனம் இலயித்து குர்ஆன் ஓது கின்ற இந்தச் சந்தர்ப்பங்களுக்காக எத்தனை எத்தனை நாள்களாக எதிர்பார்த்திருந்தேன்.

என் மீது சாய்ந்தவாறு குர்ஆன் விரிவுரை ஏடுகளைப் புரட்டிப் புரட்டிப் பார்த்து குறிப்பு எடுப்பாயே! அந்த பகற்பொழுதுகள் எங்கே போயின? நண்பர்களோடு குர்ஆன் வச னங்கள் தருகின்ற செய்திகள் குறித்து விவா திப்பாயே அந்த அமர்வுகள் எங்கே காணாமல் போயின? ஏன் இந்த இடைவெளி? எதனால் இந்த முடக்கம்? என்னதான் காரணம்?

**நான் :** ஆமாம். ரொம்ப நீண்ட இடை வெளி விழுந்து விட்டது. என்னுடைய அலட்சியம்தான் காரணம்.

**சுவர் :** என்ன உமக்குத் தெரியவில் லையா? இந்தப் பூமியில் இருக்கின்ற உயிரற்ற பொருள்கள் அனைத்தும் உன்னுடைய விவகாரங்கள் குறித்து சாட்சி சொல்லும். அல்லாஹ் அறிவிக்கின்றான்: 'மேலும் பூமி தன்னுள்ளிருக்கும் சுமைகள் அனைத்தையும் வெளிக்கொணர்ந்து விடும்போது, மேலும், 'அதற்கு என்ன நேர்ந்துவிட்டது?' என்று மனிதன் கேட்கும்போது அந்நாளில் அது தன் மீது நடந்துவிட்ட நிகழ்ச்சிகளை எடுத் துரைக்கும்.' (திருக்குர்ஆன் 99:2-4)

இதனால்தான் சொல்கின்றேன். எனக்கு அருகில் அமர்ந்து குர்ஆன் ஓது! நல்லறங்கள் செய்! நஃபில் தொழுகைகளை நிறைவேற்று! மறுமைநாளில் நான் உமக்குச் சாதகமாக இவற்றையெல்லாம் எடுத்துரைப்பேன்.

**நான் :** முந்தைய காலத்தைச் சேர்ந்த வர்கள் இப்படித் தனிமையில் அமர்ந்தார்களா, என்ன? நான் மட்டும் ஏன் தனிமையில் அமர வேண்டும்?

**சுவர் :** என்ன அப்படிச் சொல்லிவிட் டாய்? நம்முடைய அன்பு நபிகளாரும் வஹீ அருளப்படுவதற்கு முன்பு ஹிரா குகைக்குச் சென்று தனிமையில் இருந்து வந்தார்கள். மேலும் நபிகளார்(ஸல்) தம்முடைய நபித் துவக் காலம் முழுவதும் இரவுகளில் தனி மையில்தான் வழிபாடு செய்து வந்தார்கள். மேலும் ரமளானின் கடைசிப் பத்துகளில் இஃதிகாஃப் இருந்து வந்தார்கள். இவை யெல்லாமே அல்லாஹ்வுடன் தனிமையில் இருக்கின்ற அறங்கள்தாம்.

**நான் :** தனிமையில் அமர்ந்து இறைநினைவில் ஈடுபடுவதன் நன்மைகள்தாம் என்ன?

**சுவர் :** ஷஹீத் சையத் குதுப் அவர்களின் வார்த்தைகளில் சொல்கின்றேன், கேள்: ‘உங்களுடைய அன்றாட வாழ்வின் நிறத்தை, சுவையை, பாணியை மாற்றிவிட விருப்பமா? அவற்றின் திசையைத் திருத்திவிட நாட்டமா? உங்களுடைய ஆன்மா மீது உங்களின் கவனத்தைத் திருப்புங்கள். அதற்கு நாள்தோறும் சற்று நேரம் தனிமையைத் தந்தாக வேண்டும். அவசியம் தந்தாக வேண்டும்.

அதற்காக உலகக் கவலைகளிலிருந்தெல்லாம் உங்களை நீங்களே துண்டித்துக்கொண்டு அன்றாட வாழ்வின் ஆரவாரங்களிலிருந்தும் மக்களைப் பற்றிய சிந்தனைகளிலிருந்தும் விடுவித்துக் கொண்டு உங்களுக்கென சில நிமிடங்களை உருவி எடுத்துக் கொள்ளுங்கள்.

ஏனெனில் இந்தப் பரந்து விரிந்த பேரண்டத்தையும் அதில் நிறைந்திருக்கின்ற உயிர்த் துடிப்புள்ள உண்மைகளையும் குறித்து ஆராய்ந்து பார்ப்பதற்காகவும், அவற்றோடு இசைவானதாய் தம்முடைய இருப்பை ஆக்கிக் கொள்வதற்கும் சிறிது நேரத்தை ஒதுக்குவது அவசியமாகும். அதன் பிறகு ஆன்மிக உணர்வும் இருப்பும் மகத்தானதாய் ஆகிவிடும்.

**நான் :** சத்திய அழைப்பாளர் தனிமையில் அல்லாஹ்வை நினைத்தும், துதித்தும் நேரத்தைச் செலவிடுகின்றபோது அவருடைய செயல்திறனும் வலிமையும் அசாதாரணமான அளவில் வளர்ந்துவிடும் என்றுதானே நீ சொல்ல வருகின்றாய்?

**சுவர் :** ஆமாம். நான் அதனைத்தான் சொன்னேன். ஏனெனில் தனிமையில் இறைவனை நினைவுகூர்பவனுக்கு அல்லாஹ்வின் பேரொளி கிடைக்கின்றது. அதன் பிறகு அவன் அடுத்த நாள் காலையிலேயே புத்தம் புது தெம்புடனும் தெளிவுடனும் புத்துணர்வுடனும் செயற்களத்தில் இறங்கிவிடுகின்றான்.

**நான் :** தனிமையில் இறைவனை நினைவுகூர்வதை இரவில்தான் செய்ய வேண்டுமா, என்ன?

**சுவர் :** இரவுப் பொழுதுகள்தாம் சிறப்பானவை. அதற்கடுத்து ஃபஜருக்குப் பிறகு இஸ்ராக் தொழுகை வரையிலான நேரங்களிலும் இறைவனை நினைவுகூரலாம்.

**நான் :** இரவுப் பொழுதுகளுக்கு மட்டும் ஏன் அந்தச் சிறப்பு?

**சுவர் :** ஏனெனில் இரவுப் பொழுதுகள்தாம் ஆரவாரம் இல்லாதவையாய், இதமானவையாய், நிம்மதியானவையாய் இருக்கின்றன. திரும்பும் திசை எங்கும் மௌனம்தான் குடி கொண்டிருக்கும். இப்படிப்பட்ட இனிமையான, இதமான, மௌனமான சூழலில் தொழுகின்ற போதும் வழிபடுகின்ற போதும் அது மனத்துக்கும் ஆன்மாவுக்கும் குளிர்ச்சியைத் தரும். அலாதியான சுகத்தைக் கொடுக்கும். வழிபாட்டின் சுவையைக் கூட்டும்.

அறிஞர் பஷ்ர் அல்ஹாஃபி கூறுகின்றார்: ‘ஓர் இறைநம்பிக்கையாளனுக்குப் போரில் கைப்பற்றப்படுகின்ற பொருள்களுக்கு இணையான கருவூலம் என்ன தெரியுமா? அவனுடைய வழிபாடுகள் குறித்து மக்களுக்குத் தெரியாமல் போவதும், அவன் எங்கே வழிபடுகின்றான் என்கிற விவரமும் மக்களுக்குக் கிடைக்காமல் போவதும்தாம்’.

யஅலி பின் உமைய்யா(ரலி) என்று ஒரு நபித்தோழர் இருந்தார். அவர் பள்ளிவாசலில் ஒரு மணி நேரம் இஃதிகாஃப் இருப்பதாக நிய்யத் வைத்துக் கொண்டு தனிமையில் செலவிடுவதை வழக்கமாகவே கொண்டிருந்தார்.

இமாம் அஹ்மத் பின் ஹம்பல்(ரஹ்) அவர்கள் தனிமையில் இறைவனை நினைவுகூர்வதையும் வழிபடுவதையும் மிகக் கடுமையான முறையில் பேணி வந்தார் என்று அவருடைய மகனார் அப்துல்லாஹ் சாட்சியம் அளிக்கின்றார்.

இதுதான் நம்முடைய முன்னோர்களின் முன்மாதிரியான நடத்தை. நீயும் அவர்களின் காலடிச் சுவடுகளில் நடக்கக் கற்றுக்கொள். அந்தக் காலடிச் சுவடுகள் உன்னை வெற்றி யின் பக்கம்தான் இட்டுச் செல்லும்.

**நான் :** இந்த வழிபாட்டினால் இத்துணை நன்மைகள் இருக்கின்றனவெனில் இதற்குப் பின்னால் இத்துணை நுட்பங்கள் உள்ளன எனில் மனிதர்களில் சிலர் இதற்காக நேரத்தை ஒதுக்குவதில்லையே, ஏன்?

**சுவர் :** ஆன்மிக மருத்துவர்களில் மகத் தானவராக பேர் பெற்ற இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் மனிதர்களிடம் நன்மைகள் அதிகமாக இல்லாமல் போவதுதான் இதற்குக் காரணம் என்று அறிவித்திருக் கின்றார்கள். தம்முடைய 'இஹ்யா உலூமுத்தீன்' என்கிற நூலில் அவர் குறிப்பிடு கின்றார்:

மனிதனுக்கு தன் சுயம் மீதே வெறுப்பும் பீதியும் ஏற்பட்டு விடுகின்றன. ஏனெனில் அவருடைய சுயம் உயர்ந்த நடத்தையைக் கொண்டதாக இருப்பதில்லை. இத்தகைய நிலையில் இவர்கள் மக்கள் மத்தியில் அதிக மாக இருக்கத் தொடங்கி விடுகின்றார்கள். மக்கள் நிறைந்த கூட்டத்திலும் கும்பலிலும் இவர்கள் தங்களின் இந்த வெறுப்பை யும் பீதியையும் மறைத்துக் கொள்கின் றார்கள்.'

அதாவது அவர்கள் தனிமையில் இருக் கின்றபோது தம்மைத்தாமே, தம்முடைய வண்டவாளங்களைப் பார்க்க வேண்டிய கட்டாயம் உருவாகிவிடும். இதன் காரண மாக இவர்கள் தனிமையை விட்டு வெருண் டோடுகின்றார்கள்.

**நான் :** நீ சொல்வது சரிதான். சரி, தனிமை யில் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்தும் இரண்டு வரி சொல்லேன்.

**சுவர் :** அல்லாஹ்வுடன் நீ தனித்திருக் கின்றபோது உன்னுடைய உளத்தூய்மையை வளர்த்துக் கொள்வதற்காகவும் உன்னை நீயே மேம்படுத்திக் கொள்வதற்காகவும் ஏராளமானவற்றைச் செய்யலாம். அல்லாமா இப்னு தைமிய்யா(ரஹ்) அவர்களின் வார்த் தைகளில் சொல்ல வேண்டுமெனில்:

'தனிமையில் கழிப்பதற்காகவென்றே அன்றாடம் ஒரு குறிப்பிட்ட நேரம் அடியான் வசம் இருந்தாக வேண்டும். பிரார்த்தனை, இறைஞ்சுதல், முறையீடு, இறைநினைவு, தொழுகை, சுய மதிப்பீடு, மனஇச்சையை மதிப்பிடுதல், இதயத்தைச் சீர்திருத்துதல் என இது போன்ற ஏராளமான அறங்களைத் தனிமையில் செய்வதை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். உண்மையில் சொல்லப் போனால் இந்த அறங்களைச் செய்வதற்கு தனிமை மிகவும் அவசியம். இந்தத் தனிமை அவருக்கு அவருடைய வீட்டில் கிடைத் தாலும் சரி, வேறு எந்தவொரு இடத்தில் கிடைத்தாலும் சரி'.

**நான் :** எல்லாச் சுவர்களும் உன்னைப் போன்று பேசத் தொடங்கிவிட்டால், நல்ல நல்ல கருத்துகளை எனக்குச் சொல்லத் தொடங்கிவிட்டால் எத்துணை நன்றாக இருக்கும்!

**சுவர் :** இன்னோர் முக்கியமான, பயனுள்ள, சிறப்பான செய்தி இருக்கின்றது.

**நான் :** அதென்ன? சீக்கிரம் சொல்லேன்.

**சுவர் :** உடலுக்கு சோதனைகள் நடப் பதைப் போன்றே இதயத்துக்கும் சோத னைகள் நடக்கின்றன. நோய்கள், துன்பங்கள், வலிகள் போன்றவற்றைக் கொண்டு உடல் சோதிக்கப்படுகின்றது. குழப்பங்களைக் கொண்டு இதயம் சோதிக்கப்படுகின்றது. அல்லாஹ் கூறுகின்றான்: 'உண்மையில் அத்தகையவர்களின் உள்ளங்களை இறையச் சத்திற்காக அல்லாஹ் பரிசோதித்துத் தேர்ந் தெடுத்திருக்கின்றான்.' (திருக்குர்ஆன் 49:3)

எனவே உன்னுடைய இதயத்தோடும் மனத்தோடும் அறிவார்ந்த முறையில் நடந்து கொள். நல்ல முறையில் தனிமையைச் செல விடுகின்ற நற்பேற்றை அல்லாஹ் உனக்கு அருள்வானாக. ஆமீன்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

# அல் அமானத் ஹஜ் சர்வீஸ்

Serving Since 1996 27TH Year

IATA

[இந்தியா, சவூதி அரசுகளின் அங்கீகாரம் பெற்றது]

## புனித ஹஜ்,உம்ரா,ஜியாரத் பயணங்கள்
## 2022-23ஆம் வருடம் ஹிஜ்ரி(1444)

அல் அமானத் ஹஜ் சர்வீஸ் 27 ஆண்டுகளாக புனித ஹஜ் மற்றும் உம்ரா - ஜியாரத் பயணம் சிறப்பாக செய்து பயணிகளின் பாராட்டை பெற்று வருகிறது அல்ஹம்துலில்லாஹ்!

## புனித உம்ரா பயணம் 2022-23

இவ்வாண்டு செப்டம்பர் -2022 லிருந்து 2023 ரமலான் வரை ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு முறை உம்ரா புறப்படுகிறது உங்கள் வசதிக்கேற்ற தேதிகளில் பயணிக்க தொடர்புகொள்ளவும்.

ISO 9001:2008 CERTIFIED COMPANY

THOA

Ministry of Minority Affairs

## ஹஜ் பேக்கேஜ் 2023

| விஐபி பேக்கேஜ் | பிளாட்டினம் பேக்கேஜ் | கோல்டன் பேக்கேஜ் |
|---|---|---|
| ₹7,95,000/- | ₹7,25,000/- | ₹6,45,000/- |
| (GST 5% + TCS 5% NOT INCLUDED) | (GST 5% + TCS 5% NOT INCLUDED) | (GST 5% + TCS 5% NOT INCLUDED) |

குறுகிய கால விஐபி பேக்கேஜ்

₹6,95,000/-

(GST 5% + TCS 5% NOT INCLUDED)

## ஜியாரத் சுற்றுப்பயணம் FEB-2023

**உம்ராவுடன் 6 நாடுகள்-21நாட்கள்**

ஜோர்டன்,பாலஸ்தீனம்,இஸ்ரேல்,எகிப்து,ஈராக்,சவுதி

₹ 2,86,999/-

**உம்ரா இல்லாமல் 5 நாடுகள்-14 நாட்கள்**

ஜோர்டன்,பாலஸ்தீனம்,இஸ்ரேல்,எகிப்து,ஈராக்

₹ 2,14,999/-

**சிறப்பு பயணம்**

மெஃராஜ் இரவை பைத்துல் முகத்திஸில் கொண்டாடுவோம் இன்ஷா அல்லாஹ்

### ஹஜ்ஜின் சிறப்பு அம்சங்கள்

- தாயிப் சுற்றுப்பயணம்
- லாண்டரி சேவை
- மக்கா மற்றும் மதினாவில் லோக்கல் ஜியாரத்
- 5 லிட்டர் ஜம் ஜம் தண்ணீர்
- மினா மற்றும் அரஃபாத்தில் பஃபே மீல்ஸுடன் ஜமராத்திற்கு மிக அருகில் உள்ள விஜபி கூடாரங்கள்
- அனுபவமிக்க உலமாக்களின் பயான்கள் மற்றும் வழிகாட்டுதல்.
- சுவையான தென்னிந்திய பஃபே உணவு.

### தொடர்பு கொள்வீர்

சென்னை ☎ 044-28594441/2/3
+91 95516 622 31 +91 98410 786 36

திருச்சி +91 98424 051 50

கம்பம் +91 63790 179 09

ராம்நாடு +91 94428 152 35

TRUST WORTHY

**அல் அமானத் ஹஜ் சர்வீஸ் (இந்தியா) பி.லிட்.,**

B3,Bushra House,1st Floor,Old no46,New no.6, Nowroji Road
Chetpet, Chennai-600 031.ph: 044-4860 5012/3,28594441/2/3
Email:info@alamanathhajservice.com
www.alamanathhajservice.com

BRANCH OFFICE:
RAMNAD
B-3 Pal Lucky Plaza,No.13,G.H.Road,Ramanathapuram-623501
Ph: +91 94428 152 35

நபி(ஸல்) அவர்கள் உரை நிகழ்த்தும் மேடையில் ஏறினார்கள். முஸ்லிம்கள் அனைவரும் நபியவர்களைச் சுற்றி அமர்ந்திருந்தார்கள். நபி(ஸல்) அவர்கள் கேட்டார்கள்: 'ஒரு மனிதன் எனது குடும்ப விஷயத்தில் தலையிட்டு விட்டான். எனக்கு மனவேதனையை அளித்து விட்டான். எனது குடும்பத்தில் நான் நல்ல விஷயங்களைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை.

ஒரு மனிதரை எனது வீட்டாருடன் இணைத்து அவதூறு பேசப்படுகிறது. அவரிடமும் நான் நல்லதைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை. அவர் எனது வீட்டுக்குள் என்னுடன் மட்டுமே நுழைவார். தனியாக வரமாட்டார்.

எனக்குத் தொந்தரவு கொடுத்த அந்த மனிதன், எமது வாழ்கையில் குறுக்கிடாமல் இருக்க யார் அவனைத் தடுத்து நிறுத்த தயார்? அவனுக்கு எதிராக எனக்கு உதவி புரிபவர் யார்?' என நபியவர்கள் கேட்டார்கள்.

ஸஃது பின் முஆத்(ரலி) எழுந்தார். 'நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். அவர் அவ்ஸ் குலத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அவர் தலையை நான் கொய்து விடுகிறேன். அவர் கஸ்ரஜ் குலத்தைச் சேர்ந்தவராக இருந்தால், தாங்கள் கட்டளையிடுங்கள். செயல்படுத்துகின்றோம்.'


கஸ்ரஜ் குலத்தைச் சேர்ந்த ஸஃது பின் உபாதா(ரலி): 'ஸஃதே! அல்லாஹ்வின் மீது சத்தியமாக நீர் தவறாகப் பேசுகிறீர். அவரைக் கொல்ல வேண்டாம். அது உம்மால் முடியாது. அவர் உமது குடும்பத்தவராக இருந்தால் அவர் கொல்லப்பட வேண்டும் என்று நீ ஆசைப்பட மாட்டாய்!'

உடனே உஸைத் பின் ஹுலைர்(ரலி) எழுந்து, ஸஃது பின் உபாதா(ரலி) அவர்களிடம் கூறினார்: 'நீர்தான் தவறாகப் பேசுகிறீர். அல்லாஹ் மீது சத்தியமாக! அவரை நாங்கள் கொல்வோம். நிச்சயமாக நீர் நயவஞ்சகர்களுக்கு ஆதரவாகப் பேசுகின்றீர்!'

இப்படியாக அவ்ஸ், கஸ்ரஜ் ஆகிய இரு குலங்களுக்கு இடையில் குழப்பம், சண்டை, பதற்றம் ஏற்படும் சூழல் நிலவியது. அப்போது நபியவர்கள் மிம்பரில் இருந்து கீழே இறங்கி, அவர்களை அமைதிப்படுத்தினார்கள்.

### இறைஉதவி

அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் இரண்டு இரவுகள் தூக்கம் இல்லாமல் தவித்தார்கள். சில நாள்கள் கழிந்தது.



இஸ்லாமிய வரலாறு
கடந்து வந்த பாதை
33

# அன்னை ஆயிஷா(ரலி) தூய்மையானவர்

- மௌலவி முஹம்மது சித்தீக் மதனி

அவர்கள் தனது பெற்றோருடன் இருக்கின்றபோது, ஒருநாள் நபி(ஸல்) அவர்கள் அந்த வீட்டிற்கு வருகை தந்தார்கள். ஸலாம் கூறி அமர்ந்தார்கள். மேலும் தொடர்ந்தார்கள்:

‘ஆயிஷாவே உம்மைக் குறித்துச் சில செய்திகள் எமது காதுகளில் விழுகின்றன. நீர் அப்பழுக்கற்றவராக இருந்தால் அல்லாஹ் உம்மை நிச்சயம் கைவிடமாட்டான். உம்மைத் தூய்மையானவர் என வெளி உலகிற்குக் காட்டுவான். ஒருவேளை நீர் ஏதாவது சிறு பிழையில் சிக்கி இருந்தால் அதற்காக அல்லாஹ்விடம் உடனே பாவமன்னிப்புக் கேட்டுக் கொள்வாயாக! ஏனெனில் ஓர் அடியார் தனது தவறுகளை ஒப்புக் கொண்டு பாவமன்னிப்புக் கேட்டு விட்டால் அல்லாஹ் அவருடைய பாவங்களை மன்னித்து விடுகிறான்!’ (நூருல் யகீன் ப.147)

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ஆயிஷா(ரலி) அவர்களின் கண்ணீர் முழுவதுமாக நின்று விட்டது. மிகவும் கவலையுடன் தனது பெற்றோரை நோக்கி, ‘நீங்கள் இருவரும் அல்லாஹ்வுடைய தூதருக்குப் பதில் சொல்லுங்கள்’ என்று கூறினார்கள்.

அவ்விருவரும் ‘நாங்கள் என்ன பதில் கூறுவது! தெரியவில்லையே!’ என்று சொன்னார்கள்.

அப்போது ஆயிஷா(ரலி) கூறினார்கள்: ‘அல்லாஹ்வின் மீது சத்தியமாக! நீங்கள் என்னைக் குறித்து கூறப்படுவதை செவியுற்றீர்கள். அது உங்களுடைய உள்ளங்களில் ஆழமாக இடம்பிடித்து விட்டது. அவற்றை உண்மை என நீங்கள் நம்புகின்றீர்கள்.

இந்த நேரத்தில் நான் என்னை, என்னதான் தூய்மையானவர் என்று உரக்கக் கூறினாலும், என்னை நீங்கள் நம்ப மாட்டீர்கள். ஆனால் நான் தூய்மையானவர் என்பதை அல்லாஹ் நன்கு அறிவான். நான் செய்யாத தவறைச் செய்தேன் என்று ஒப்புக் கொண்டால் அதை நீங்கள் நம்புவீர்கள்.

எனக்கு இப்போது யூஸுஃப்(அலை) அவர்களின் தந்தை ‘மிக அழகிய முறையில் நான் பொறுமையை மேற்கொள்வேன். நீங்கள் புனைந்து கூறும் விஷயத்தில் அல்லாஹ்விடம்தான் உதவி கோர வேண்டும்.’ (திருக்குர்ஆன் 12:18) என்று கூறிய வார்த்தைகளையே கூற வேண்டியுள்ளது.

பின்னர் ஆயிஷா(ரலி) தமது படுக்கையில் திரும்பிப் படுத்துக் கொண்டார்கள். நபி(ஸல்) அவர்கள் அந்த வீட்டிலேயே தொடர்ந்து அமர்ந்திருந்தார்கள்.

அப்போது ஆயிஷா(ரலி) மிகவும் தூய்மையானவர்; பரிசுத்தமானவர் என்று திருமறை வசனங்கள் இறங்கியது. அந்நூர் அத்தியாயம் 11 முதல் 19 வரையுள்ள வசனங்களை இறைவன் இறக்கினான். நபியவர்கள் அதிகம் மகிழ்ச்சியுற்றார்கள். சிரித்தார்கள். அன்னை ஆயிஷா(ரலி) ‘தூய்மையானவர்’ என்ற நற்செய்தியையும் கூறினார்கள். இறைவனுக்கு நன்றி செலுத்தினார்கள்.

அப்போது ஆயிஷா(ரலி) அவர்களிடம், அவரின் தாயார், ‘மகளே! நீர் படுக்கையில் இருந்து எழுவீராக! சென்று அல்லாஹ்வின் தூதருக்கு நன்றி சொல்வீராக!’ என்று கூறினார்.

அன்னை ஆயிஷா(ரலி) ‘மாட்டேன்; அல்லாஹ்வின் மீது ஆணையாக! அவர்களிடம் நான் செல்லமாட்டேன். அல்லாஹ்வைத் தவிர வேறு யாரையும் நான் புகழவும் மாட்டேன்’ என்றார்கள்.

### அவதூறுக்கான தண்டனை

நபி(ஸல்) அவர்கள், ‘எவர்கள் அவதூறு கூறும் செயலில் ஈடுபட்டார்களோ அவர்களுக்கு 80 கசையடிகள் தண்டனையாக வழங்க வேண்டும்’ என உத்தரவிட்டார்கள். இதன் மூலம் அவர்களை, நபியவர்கள் இவ்வுலகிலேயே பாவத்திலிருந்து தூய்மைப் படுத்த விரும்பினார்கள்.

அவதூறு கூறுவதில் ஈடுபட்டவர்கள் மூவர். ஹம்னா பின்த் ஜஹ்ஷ்(ரலி) மிஸ்தஹ் பின் அஸாஸா(ரலி) ஹஸ்ஸான் பின்

ஸாபித்(ரலி). இவர்கள் நயவஞ்சகர்களின் சதிவலையில் வீழந்ததினால் திருமறை இவர்களைக் கண்டித்தது.

'நீங்கள் இதனைச் செவியுற்ற போதே நம்பிக்கையாளர்களான ஆண்களும் பெண்களும் தங்களைப் பற்றி ஏன் நல்லெண்ணம் கொள்ளவில்லை? இது ஓர் 'அப்பட்டமான அவதூறு' என்று ஏன் அவர்கள் கூறிடவில்லை?' (திருக்குர்ஆன் 24:12)

அப்துல்லாஹ் பின் உபையை நபியவர்கள் தண்டிக்கவில்லை. ஏனெனில் அவர் தமக்கு எதிராக எந்த ஆதாரத்தையும் விட்டு வைக்கவில்லை. (முஸ்லிம் 2770) மட்டுமல்ல, அவரை இம்மையில் நபி(ஸல்) அவர்கள் தூய்மைப்படுத்த விரும்பவில்லை போலும்!

## உதவியை நிறுத்தக்கூடாது

அபூபக்கர்(ரலி) அவர்கள் மிஸ்தஹ்(ரலி) என்பவருக்கு, அவர் உறவினர் என்பதனால், சில நிதி உதவிகளைச் செய்து கொண்டிருந்தார். மிஸ்தஹ் அவதூறு பேசுவதில் ஈடுபட்டதனால், அபூபக்கர்(ரலி) அந்த உதவியை நிறுத்தி விட்டார். இறைவன் பின்வரும் வசனத்தை இறக்கினான்:

'உங்களிடையே பண்பு நலன்களும், வசதிகளும் உடையவர்கள், 'தங்களுடைய உறவினர்கள், வறியவர்கள் மற்றும் அல்லாஹ்வின் பாதையில் ஹிஜ்ரத் செய்தவர்கள் ஆகியோருக்குக் கொடுத்துதவ மாட்டோம்' என்று சத்தியம் செய்ய வேண்டாம். அவர்களை மன்னித்து விட வேண்டும்; பொறுத்துக் கொள்ளவும் வேண்டும். அல்லாஹ் உங்களை மன்னிக்க வேண்டுமென நீங்கள் விரும்புவதில்லையா என்ன? மேலும், அல்லாஹ் பெரும் மன்னிப்பாளனாகவும் கிருபையாளனாகவும் இருக்கின்றான்.' (திருக்குர்ஆன் 24:22).

அபூபக்கர்(ரலி) கூறினார்: 'இல்லை! அல்லாஹ்வின் தூதரே! நாங்கள் எங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என விரும்புகின்றோம்'. பின்னர் மீண்டும் அந்த உதவித் தொகையைத் தொடர்ந்து வழங்க ஆரம்பித்தார்.

## அவதூறு சமயத்தில் நபித்தோழர்கள்

நபித்தோழர்கள் இச்சூழலில் மிகவும் வாய்மையாக நேர்மையாக நடந்து கொண்டனர். நபியவர்களின் குடும்பம் அப்பழுக்கற்றது. அவர்களின் குடும்பத்தினர் கறைபடியாதவர்கள். மிகவும் பரிசுத்தமானவர்கள் என உறுதியாக நம்பினார்கள்.

அபூ அய்யூப் அல் அன்சாரி(ரலி) அவர்களின் மனைவி கூறுகின்றார்: 'அபூ அய்யூப்(ரலி) அவர்களே! அன்னை ஆயிஷா(ரலி) குறித்து மக்கள் பேசிக் கொள்வது தங்கள் காதில் விழவில்லையா?' அவர் கேட்டார்: 'என்ன பேசுகிறார்கள்?' அவரது மனைவி, அவதூறு பேசுகிறவர்களின் சில சொற்களை எடுத்துக் கூறினார்.


அதற்கு அபூ அய்யூப்(ரலி) கூறினார்: 'சுப்ஹானல்லாஹ்! இப்படி எல்லாம் பேசுவது தவறு. இது அபாண்டமான பெரிய பழியாகும்'. அப்போது இறைவன் இந்த வசனத்தை இறக்கினான்:

நீங்கள் இதனைக் கேள்விப்பட்டதுமே, 'இவ்வாறான விஷயத்தை நாம் பேசுவது நமக்கு ஏற்றதல்ல; ஸுப்ஹானல்லாஹ் அல்லாஹ் தூய்மையானவன்! பெரும் அவதூறாயிற்றே இது!' என்று ஏன் நீங்கள் கூறிடவில்லை? (திருக்குர்ஆன் 24:16) அஸ்பாப் நுஸூல் பக்கம் 218

அன்சாரிகளில் ஒருவர் இந்த அவதூறைச் செவியுற்றபோது உடனே கூறினார்: 'இது மாபெரும் பழியாகும். இவ்வாறு பேசுவது ஒருபோதும் கூடாது'. புகாரி 7370

இது நயவஞ்சகர்களின் சதி. இவர்கள் வலுவான முஸ்லிம் பொது சமூகத்தில் கலப்பார்கள். அதை நேசிப்பதாகப் பேசுவார்கள். அவர்களின் உள்ளங்கள் பொறாமையால் வன்மங்களால் நிரம்பி வழியும். அவர்கள் அந்த சமுதாயத்தில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளைத் தேடி அலைவார்கள். அப்படிக் கிடைத்து விட்டால் அதை நழுவ விடமாட்டார்கள்.

(தொடரும்)



# அமானிதம்: சமூகங்களை வலுப்படுத்தும் காரணி

-ரஹ்மத் நிஷானா

உலகின் இன்றியமையாத தேவையாக இருப்பது நம் பிக்கைதான். எங்கு பார்த்தாலும் வெறுப்பும், மோசடியும் நிலவும் சமூகச் சூழலில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தனிநபர் தொடர்புகள், சமூகத் தொடர்புகள் என எங்கும் முழுமையான நம்பிக்கை உணர்வு இல்லை.

வெற்றிகரமான அரசியலுக்கும், அமைதியான சமூகச் சூழலுக்கும் அடிப்படையாக விளங்குவது நம்பிக்கையே. ஆம்! மனிதர்கள் ஒருவரையொருவர் நம்புவதுதான் வாழ்க்கை. இத்தகைய நம்பிக்கை இல்லையென்றால் வாழ்க்கைப் பயணம் அமைதியாகவும் நிம்மதியாகவும் இருக்காது. இதனால் தான் இஸ்லாம் ‘அமானிதம்’ குறித்து வலியுறுத்திப் பேசு கிறது.

‘அமானத்’ ஓர் அரபு வார்த்தையாகும். அகராதியின் விளக் கப்படி அமைதி, பாதுகாப்பு, நம்பிக்கை போன்ற பொருள்களை உள்ளடக்கியுள்ளது. உள்ளச்சத்துடன் செயல்படுவதற்கு தூண்டு தலை அளிக்கும் தலையாயக் காரணியாகத் திகழ்வது அமானிதம் தான். மார்க்கம், வாழ்க்கை, குடும்பம், கொடுக்கல் வாங்கல், பொறுப்புகள் அனைத்திலும் இந்த அமானிதத்தின் தாக்கம் அதிகம் எனலாம். அமானத் திருக்குர்ஆனில் பல இடங்களில் வலியுறுத்தப்பட்ட ஒன்று.

### திருக்குர்ஆனில் அமானிதம்

‘நீங்கள் பயணத்திலிருந்தால் மேலும் (ஒப்பந்தப் பத்திரம் எழுதுவதற்கு) எந்தவொரு எழுத்தரும் உங்களுக்குக் கிடைக்க வில்லையாயின் அடகுப் பொருளைப் பெற்றுக்கொண்டு நீங்கள் கொடுக்கல்வாங்கல் செய்து கொள்ளலாம். உங்களில் ஒருவர் மற்றொருவரை நம்பி ஏதேனும் பொருளை ஒப்படைத்தால்

*‘அமானத்’ ஓர் அரபு வார்த்தையாகும். அகராதியின் விளக் கப்படி அமைதி, பாதுகாப்பு, நம்பிக்கை போன்ற பொருள்களை உள்ளடக்கியுள்ளது. உள்ளச்சத்துடன் செயல்படுவதற்கு தூண்டுதலை அளிக்கும் தலையாயக் காரணியாகத் திகழ்வது அமானிதம் தான். மார்க்கம், வாழ்க்கை, குடும்பம், கொடுக்கல் வாங்கல், பொறுப்புகள் அனைத்திலும் இந்த அமானிதத்தின் தாக்கம் அதிகம் எனலாம்.*

(அமானிதப்) பொருளைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். இன்னும் தன் அதிபதியான அல்லாஹ்வுக்கே அவர் அஞ்சிக் கொள்ளட்டும்! மேலும் சாட்சியத்தை நீங்கள் மறைத்து விடாதீர்கள். யாரேனும் சாட்சியத்தை மறைத்தால் அவருடைய இதயம் நிச்சயமாக பாவத்திற்குள்ளாகி விடுகின்றது. இன்னும் அல்லாஹ் நீங்கள் செய்கின்ற அனைத்தையும் நன்கறிபவனாயிருக்கின்றான்.' (திருக்குர்ஆன் 2:283)

('முஸ்லிம்களே!) அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான். அடைக்கலப் பொருள்களை அவற்றிற்குரியவர்களிடம் நீங்கள் ஒப்படைத்து விடுங்கள்; நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கினால் நீதத்துடன் தீர்ப்பு வழங்குங்கள். திண்ணமாக, அல்லாஹ் உங்களுக்கு வழங்குகின்ற அறிவுரை மிக உன்னதமானதாகும். திண்ணமாக அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவனாகவும் உற்று நோக்குபவனாகவும் இருக்கின்றான்.' (திருக்குர்ஆன் 4:58)

'நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் (அறிந்தும் புரிந்தும்) வஞ்சனை செய்யாதீர்கள்; அறிந்து கொண்டே உங்களுடைய அமானிதங்களில் நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்.' (திருக்குர்ஆன் 8:27)

'இன்னும் அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களையும் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளையும் பேணிக் காக்கக்கூடியவராய் இருக்கின்றார்கள்.' (திருக்குர்ஆன் 23:8)

மேற்கூறப்பட்டுள்ள வசனங்களில் அமானத் என்பது நபிமார்களின், இஸ்லாமிய செயல் வீரர்களின் அடிப்படைத் தகுதி என்பதாக வர்ணிக்கிறது. இது போன்று வியாபாரம், ஒப்பந்தம் என தனிமனித, சமூகத் தொடர்புகளுக்கு அமானத் அடிப்படைப் பண்பாக எடுத்துரைக்கிறது. அது மட்டுமின்றி பொறுப்புகள், பதவிகள் என்பது நம்பிக்கையின் அடித்தளத்தில் ஒருவருக்குக் கொடுக்கப்படுகிறது என்பதன் காரணத்தால்தான் அமானத்தின் வரையறையில் பொறுப்புகளையும் பதவிகளையும் திருக்குர்ஆன் உள்ளடக்கியிருக்கிறது.

மேலும் சில வசனங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றது. 'இறைநம்பிக்கையாளர்களே உங்கள் மீதுள்ள கட்டுப்பாடுகளை முழுமையாக நிறைவேற்றுங்கள்' (திருக்குர்ஆன் 5:1)

'மேலும், ஒப்பந்தத்தை முறையாகப் பேணி வாழுங்கள். ஏனெனில், ஒப்பந்தம் குறித்து நீங்கள் விசாரணை செய்யப்பட்டே தீருவீர்கள்!' (திருக்குர்ஆன் 17:34)

மேற்சொல்லப்பட்டுள்ள வசனங்களில் திருக்குர்ஆன் நம்பிக்கையை இரண்டு நிலைகளிலிருந்து விளக்குவதைத் தெளிவாகப் புரிய முடிகிறது.

முதலாவதாக, நம்பிக்கை என்பது அடியானுக்கும் படைப்பாளனுக்கும் இடையே உள்ளது. எனவே இந்த முழுப் பிரபஞ்சமும், பிரபஞ்சத்தில் நடக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் அமானத் ஆகும். மனிதன் அதனை நிறைவேற்றும் கலீஃபா(பிரதிநிதி) ஆவான். எனவே மனிதர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அமானிதத்தை முழுமையாக நிறைவேற்றுவது அவசியமாகும். அமானிதத்தை நிறைவேற்றும் வேளைகளில் எவ்விதக் குற்றங்களும் துரோகங்களும் இடம்பெற்றுவிடக் கூடாது என்பதையும் திருக்குர்ஆன் தெளிவுபட எடுத்துரைக்கிறது.

இரண்டாவதாக, அமானத் என்பது மனிதர்களுக்கு இடையிலான விவகாரங்களுடன் உணர்வுப்பூர்வமான தொடர்பு கொண்டது. இருதரப்பிலிருந்தும் நம்பிக்கை, நேர்மையின் அடிப்படையில் விவகாரங்கள் அமைந்தால் மட்டுமே மனிதர்களுக்கு மத்தியில் அமைதியும் திருப்தியும் நிலவும்.

## அமானிதமும் தூதரின் வழிமுறையும்

இறைத்தூதர் முஹம்மது நபி(ஸல்) அவர்கள் அமானிதம் குறித்து அதிகமாக

வலியுறுத்தியுள்ளார்கள். நபிகளாரின் ஸுன்னா அடைக்கலப் பொருள்கள் மீதான நம்பிக்கையை ஒரு வெற்றிகரமான தனி நபருக்கும், சமூகத்திற்கும் அடித்தளமாக எடுத்துரைக்கிறது.

நபி(ஸல்) அவர்கள் நபித்துவம் கிடைப் பதற்கு முன்னரே 'அல் அமீன்' எனும் நம்பத்தகுந்த மனிதராக இருந்தார்கள். அமானத் என்பது ஓர் இறைநம்பிக்கை யாளருக்கும் இறைநம்பிக்கையாளர் அல்லாத வருக்கும், உண்மையான முஸ்லிமுக்கும் நயவஞ்சகமான முஸ்லிமுக்கும் இடையில் அளவுகோலை நிர்ணயிப்பது என்று இறைத் தூதரின் வழிமுறை நமக்குத் தெளிவுபடுத்து கின்றது.

முஹம்மது நபி(ஸல்) அவர்கள் கூறி னார்கள்: 'நயவஞ்சகனின் அடையாளங்கள் மூன்று. அவை: 1. பேசினால் பொய்யே பேசு வான் 2. வாக்குறுதி கொடுத்தால் மீறுவான் 3. நம்பினால் மோசடி செய்வான்.' நம்பிக்கைத் துரோகத்தை அல்லாஹ் எந்தச் சூழ்நிலையிலும் மன்னிக்க மாட்டான். உயிர்த்தியாகிகள் நம் பிக்கை மோசடியில் ஈடுபட்டிருந்தாலும்கூட இறைவன் மன்னிக்க மாட்டான் என நபிமொழிகள் எடுத்துரைக்கின்றன.

நம்பிக்கை எனும் பண்பு இல்லாதவரின் ஈமான் ஏற்றுக்கொள்ளப்படாது என மற் றொரு நபிமொழி அறிவிக்கின்றது. இமாம்கள் அதிகம் வலியுறுத்திய விஷயம் அமானிதம் தான். காரணம் அழகான வலிமையான அரசாங்கத்திற்கும் சமூகத்திற்கும் அமானிதம் அத்தியாவசியம்.

எந்தவொரு சமூகத்தின் அமைதிக்கும் நிலைத்தன்மைக்கும் அடிப்படையாய் விளங்குவது பிற சமூகங்களிடம் நட்புறவை வளர்ப்பதுதான். இதனையே நாம் சமூக நம்பிக்கை என்கிறோம். இது சமூகவியல் துறை அறிஞர்கள் பலரும் ஏற்றுக்கொள் ளும் ஒன்று. 'நம்பிக்கை என்பது ஒரு சமூகச் சொத்து. அது ஒழிக்கப்பட்டால் சமூகங் களும் அழிந்து போகும்' என்று புகழ் பெற்ற சமூகவியலாளர் சிஸ்ஸெலா போக் கூறுகின்றார்.

பிற சமூகங்களின் நம்பிக்கையைப் பெறு வது ஒற்றுமைக்கு மட்டுமின்றி அரசியல் எழுச்சிக்கும், பொருளாதார ரீதியாக ஆற்றல் பெறுவதற்கும் மிகவும் அடிப்படை யானது. நபிகளார்(ஸல்) அவர்கள் மதீனாவில் ஆரம்பக் கட்டத்தில் கட்டமைத்தது சமூக நம்பிக்கையையே. அதனைத் தொடர்ந்து நேர்வழி பெற்ற கலீஃபாக்களும் சமூக நம்பிக் கையைப் பாதுகாப்பதில் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளனர்.

அமானத் என்பது குர்ஆனும் நபிவழியும் அதிகம் வலியுறுத்திய விஷயம். அதன் விளைவுகள் சமூகத்தில் மிகப் பரவலாக உள்ளது. இத்தகைய கண்ணோட்டமில்லாமல் வெற்றிகரமான தனிநபரையோ, சமூகத் தையோ உருவாக்க முடியாது.

ஒரு
வாட்ஸ்அப்
மெஸேஜ் போதும்!

- இலவசமாய் இஸ்லாமிய நூல்களைத் தொடர்ந்து வாசிக்கலாம்.
- இதர மத அன்பர்களின் இஸ்லாம் குறித்த தேடலுக்கான தளம்
- இது ஓர் அஞ்சல் வழி நூலகம்

உங்களின் முழு முகவரியையும், விருப்பத்தையும் 89252 16126 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெஸேஜ் அனுப்புங்கள். நூல்கள் வீடு தேடி வரும்.

இஸ்லாமிக் அகாடமி
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
மின்னஞ்சல் : postallibrary@gmail.com

# அல்குர்ஆனை அணுக ஓர் அழகிய வழிகாட்டி

**நூல்** : அல்குர்ஆனை அணுகும் முறை
**ஆசிரியர்** : டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி
**தமிழில்** : மௌலவி நூஹ் மஹ்ழரி
**வெளியீடு** : இஸ்லாமிய நிறுவனம் அறக்கட்டளை(IFT) 138, IFT லேன், பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 12.
**பக்கங்கள்** : 496 **விலை :** ரூ. 400
**தொடர்புக்கு** : 044-2661 0091, 8668057596




இந்நூற்றாண்டின் மிகச் சிறந்த இஸ்லாமியப் பேரறிஞர்களில் ஒருவரான ஷெய்க் டாக்டர் யூசுஃப் அல்கர்ளாவி எழுதிய மிக முக்கியமான நூல்களில் ஒன்றுதான் ‘கைஃப நதஆமலு மஅல் குர்ஆனில் அளீம்’ எனும் அரபி நூல். இந்த நூலைப் பன்னூலாசிரியர் மௌலவி நூஹ் மஹ்ழரி சிறப்பான முறையில் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். அல்குர்ஆனை அணுகும் முறை எனும் தலைப்பில் இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் (IFT) வெளியிட்டுள்ளது.

உலக மக்கள் அனைவருக்கும் ஒரு நல்லுரையாக ஏக இறைவனால் இறுதித் தூதர் முஹம்மத் நபி(ஸல்) அவர்களுக்கு இறுதி வேதமாக அனுப்பப்பட்ட உன்னதமான நூல் திருக்குர்ஆன். 14 நூற்றாண்டுகளுக்கும் மேலாக எந்த மாறுதலுக்கும் உட்படாமல் இன்று வரையிலும், இன்னும் இந்த யுக முடிவு வரையிலும் மக்கள் அனைவருக்கும் திருக்குர்ஆன் தெளிவான வாழ்க்கை வழிகாட்டி நூலாகத் திகழ்ந்துகொண்டிக்கும் என்பதில் எள்முனையளவும் ஐயமில்லை.

இறைவனின் இறுதி வேதமாகிய திருக்குர்ஆனை எப்படி அணுக வேண்டும், ஓத வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும், அதன்படி ஒழுக வேண்டும் என்பதற்கான ஓர் அழகிய வழிகாட்டி நூல்தான் இந்த நன்னூல். 1. அல்குர்ஆனின் தனிப்பெரும் சிறப்புகளும் இலக்குகளும் 2. மனப்பாடம், ஓதுதல், செவியுறுதல் ஆகியவை மூலம் குர்ஆனை அணுகும் முறை 3. புரிதல், விளக்கவுரை ஆகியவை மூலம் குர்ஆனை அணுகும் முறை 4. பின்பற்றுதல், செயல்படுத்துதல், தீர்ப்பளித்தல், அழைத்தல் ஆகியவை மூலம் குர்ஆனை அணுகும் முறை எனும் நான்கு முக்கிய பாகங்களை இந்த நூல் உள்ளடக்கியுள்ளது.

அல்குர்ஆன் ஓர் இறைவேதம் என்பதில் தொடங்கி அது தொகுக்கப்பட்ட வரலாறு, முழுமையான வழிகாட்டும் வேதம், குர்ஆன் உறுதிப்படுத்தும் மனித உரிமைகள், மனித கண்ணியம், குடும்ப உருவாக்கம், பெண்களுக்கான நீதி, மக்களுக்குச் சான்று வழங்கும் சமூகத்தைக் கட்டமைத்தல், முஸ்லிம் சமூகத்தின் அடிப்படைக் குணங்கள், சகோதரத்துவம், உலக அமைதி, சகோதர சமயத்தவர்களுடன் சகிப்புத்தன்மை போன்ற பல்வேறு அம்சங்களைக் குர்ஆனுடைய ஒளியில் தெள்ளிய நீரோடைபோல விளக்குகிறார் நூலாசிரியர்.

குர்ஆனின் இலக்குகளாக மானுட வர்க்கத்தின் நன்மைக்கும் உயர்வுக்கும் அவசியமான பின்வரும் ஏழு அம்சங்களை முன்வைக்கிறார் நூலாசிரியர்.

1. இறைநம்பிக்கை, தூதுத்துவம், மறுமை ஆகிய அடிப்படை நம்பிக்கைகள் குறித்த சரியான பார்வையை முன்வைத்தல் 2. மனித மகத்துவம், மனித உரிமைகளை - குறிப்பாக பலவீனமானவர்களுடைய உரிமைகளை உறுதி செய்தல் 3. அல்லாஹ்வை அழகிய முறையில் வணங்குதல், அவனையே அஞ்சுதல் போன்றவற்றுக்குச் சன்மார்க்க வழிகாட்டுதல் 4. உளத்தூய்மையின் பால் மனிதனை அழைத்தல் 5. நன்மை நிறைந்த குடும்ப உருவாக்கம், பெண்களுக்கான நீதியைப் பெற்றுத் தருதல் 6. மக்களுக்குச் சான்று வழங்குபவர்களாக வாழும் சமூகத்தைக் கட்டமைத்தல் 7. பரஸ்பரம் ஒத்துழைப்பு நல்கும் உன்னத மனித உலகின் பால் அழைத்தல்.

மக்களுக்குச் சான்று வழங்கும் சமூகத்தைக் கட்டமைத்தல் எனும் தலைப்பின் கீழ் இவ்வாறு எழுதுகிறார்: 'இஸ்லாத்தின் கட்டளைகளுக்கு ஏற்ப அதன் கொள்கை, வழிமுறைகளின் அடித்தளத்தில் தனித்துவமிக்க ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்புவதே குர்ஆனுடைய மற்றுமொரு முக்கிய இலக்கு. வளரும் தலைமுறை இஸ்லாம் காட்டும் வழிமுறைகளினூடாக வார்த்தெடுக்கப்பட வேண்டும்; அவர்கள் இஸ்லாத்தின் செய்தியை உலகெங்கும் சுமந்து செல்ல வேண்டும்; அந்தச் செய்தியுடன் கருணை, நன்மை ஆகியவற்றையும் மனித குலத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்பது குர்ஆனுடைய இலக்காகும்'.

குர்ஆனைப் பின்பற்றுதல் என்ற தலைப்பின் கீழ், 'பல இலட்சம் மக்கள் குர்ஆனை மனப்பாடம் செய்துள்ளனர். மில்லியன் கணக்கில் மக்கள் நாள்தோறும் குர்ஆனை ஓதுகின்றனர்; செவியேற்கின்றனர். கோடிக் கணக்கான மக்கள் வீட்டுச் சுவர்களைக் குர்ஆன் வசனங்களால் அலங்கரிக்கின்றனர். இவையனைத்தும் இருந்தும்கூட முஸ்லிம்களுடைய அறிவின் வழிகாட்டியாகவோ, முஸ்லிம்களின் இதயங்களில் ஆட்சி செலுத்தக் கூடியதாகவோ, முஸ்லிம்களுடைய நடவடிக்கைகளில் ஆதிக்கம் செலுத்தக்கூடியதாகவோ, முஸ்லிம்களுடைய வாழ்வை மாற்றக்கூடியதாகவோ குர்ஆன் மாறவில்லை என்பதே கசப்பான உண்மை' என்று தனது கவலையை வெளிப்படுத்துகிறார்.

இவ்வாறு நூல் முழுவதும் வாசிப்பவரின் உள்ளத்தைத் தட்டியெழுப்பி, எழுச்சியூட்டும் பல்வேறு அம்சங்களை எடுத்தியம்புகிறார். திருக்குர்ஆன் எனும் கடலில் மூழ்கி முத்தெடுக்க விரும்பும் ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்க வேண்டிய பொக்கிஷம் இது. ஒவ்வொரு இல்லத்திலும், உள்ளத்திலும் இருக்க வேண்டிய நன்னூல் இது!

**- K.ஜலாலுத்தீன்**

---




**நூல் :** கால் நூற்றாண்டு கலவரக் கதைகள்

**நூலாசிரியர் :** புதுமடம் ஹலீம்

**வெளியீடு:** துருவம் வெளியீடு,
எண். 9, சொக்கநாதன் நகர், 3ஆவது தெரு,
மதுரவாயல், சென்னை - 600 096.

**தொடர்புக்கு :** 98419 43437

**பக்கங்கள் :** 176 **விலை :** ரூ.220/-




**நூல் :** 36 வயதினிலே..

**நூலாசிரியர் :** ஃபாத்திமா சபரிமாலா

**வெளியீடு:** அழகிய முன்மாதிரி பதிப்பகம், தமிழ்நாடு

**தொடர்புக்கு :** olivetimesnewsmedia@gmail.com

**பக்கங்கள் :** 87

**விலை :** ரூ.120/-



# மாண்புயர் மாதம்!

- பருத்தி இக்பால்

ரமளான்
மாதங்களில் புனிதமானது
மன்னிப்பதில் இனிதானது
பசியைக் கொடுப்பது அல்ல
பசியை உணர்த்தும் மாதமிது

ஷைத்தானை விலங்கிட்டு
பூட்டி வைத்து
புவியெங்கும் அருள்மழை
பொழியும் மாதமிது

நன்மைகளைப் பன்மடங்கு
அதிகம் கொடுத்து
உடல்நிலை சமன்படுத்தி
நலத்தைக் கொடுக்கும் மாதமிது

நம்மை நேர்வழிப்படுத்த
படைத்தவனால் இறக்கப்பட்ட
புனிதத் திருமறை
வந்துதித்த மாதமிது

ரய்யான் வாயில் திறக்கப்பட்டு
காத்திருக்கும் மாதமிது
வானவர்கள் நமைத்தேடி
வந்திறங்கும் மாதமிது

வல்லோன் நன்மைகளை
வாரி வழங்கும் மாதமிது
சலுகைகள் பற்பல கொடுக்கும்
மாண்புயர் மாதமிது

இச்சைகளை ஒத்தி வைத்து
திருமறையோடு மனதை ஒன்ற வைத்து
பாவம் போக்கிட
தூய்மையாகும் மாதமிது

அன்புள்ள குட்டீஸ்! சென்ற இதழில் கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு பதில்கள் இதோ. நீங்கள் கண்டுபிடித்த பதில்கள் சரியானதா என ஒப்பிட்டுப் பாருங்கள்.

1. பறவைத் தீவு என அழைக்கப்படுவது எது? - நியூசிலாந்து
2. உலகில் எந்த நாட்டில் பெட்ரோலிய இருப்புகள் அதிகமாக உள்ளன? - சவூதி அரேபியா
3. நோன்பின் நோக்கம் என்று திருமறை எதனைக் குறிப்பிடுகிறது? - இறையச்சம்
4. நோன்பாளிகள் மட்டும் செல்லக்கூடிய சொர்க்கவாயிலின் பெயர் என்ன? - ரய்யான்
5. அண்மையில் அதிக ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டு, அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகள் நிகழ்ந்தது எந்த நாட்டில்? - துருக்கி
6. கனடா நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வெறுப்புப் பரப்புரைகளை முடிவுக்குக் கொண்டு வர கனடா அரசாங்கம் நியமித்துள்ள Anti Islamophobia Advisor-இன் பெயர் என்ன? - அமீரா எல்கவாஃபி

## சித்திரம் பேசுது..!



அபிபா, 4ஆம் வகுப்பு,
விஸ்டம் மெட்ரிகுலேஷன் பள்ளி,
கடையநல்லூர்



அ.மு. ரசிமா
சுலைகாள்,
7ஆம் வகுப்பு,
ITW மதரஸா,
கடையநல்லூர்

## அன்புச் செல்லங்களே..!

இது உங்கள் பக்கம். சிறுகதை, கவிதை, துணுக்கு, விடுகதை என நீங்கள் எதுவும் எழுதலாம்.! இங்கு இடம்பெற்றுள்ள அழகிய வண்ண ஓவியங்களைப் போல நீங்களும் ஓவியங்கள் வரைந்து அனுப்பலாம்.

படைப்புகள் உங்கள் சொந்தத் திறனில் உருவாகியிருக்க வேண்டும். உங்களின் பெயர், பள்ளி, வகுப்பு, முழு முகவரியையும் மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :
சிறார் உலகம்,
சமரசம் மாதமிருமுறை இதழ்
IFT லேன்,
138 பெரம்பூர் நெடுஞ்சாலை,
சென்னை - 600012

# வழிகாட்டுகிறார் **ஜவ்ஹறா மெஹர்**

கடின உழைப்பும், சுய சிந்தனையும் இணைந்தால் அனைத்தும் வசப்படும் என்பதற்கு உதாரணம் ஜவ்ஹறா மெஹர். கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டம் கோட்டக்கல் அருகிலுள்ள சாப்பனங்காடி கிராமத்தைச் சேர்ந்த மௌலவி அப்துல் சத்தார் - சுபைதா தம்பதியரின் மகள் மெஹர்.

பெற்றோரின் ஊக்குவிப்பால் பி.டெக் மின்னணுவியல் தேர்ச்சி பெற்றார். இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயான ஜவ்ஹறாவின் மேற்படிப்பு ஆசையைத் தெரிந்து கொண்ட கணவர் ஜுபைர் முழு ஒத்துழைப்பு வழங்க ஜவ்ஹறா தொலைதூரக் கல்வியில் எம்.பி.ஏ படித்து வருகிறார்.




இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆசிரியர் பயிற்சி படிக்கும் கணவரின் சகோதரிக்குக் கைடு புக் வாங்குவதற்குப் பல புத்தக விற்பனைக் கடைகளில் ஏறி இறங்கிய பிறகு குறிப்பிட்ட வினா விடைத் தொகுப்பு ஸ்டாக் இல்லை என்றே பதில் வந்தது.

தனது நாத்தனாருக்குத் தேர்வு நெருங்கியபோது அவருக்கு உதவ ஜவ்ஹறா முன்வந்தார். கடந்த ஆண்டுகளின் பழைய தேர்வு வினாத் தாள்களைத் தேடியெடுத்து அனைத்துப் பாடங்களுக்கும் புதிதாக ஒரு தேர்வு வழிகாட்டி வினா விடை கையெழுத்துப் பிரதி தயார் செய்து நாத்தனாருக்கு வழங்கினார். 85 விழுக்காட்டுக்கும் அதிகமான வினாக்கள் இவரின் தொகுப்பிலிருந்து கேட்கப்பட்டிருந்தது குடும்பத்தினருக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

ஜவ்ஹறாவின் தேர்வு வழிகாட்டி குறித்து தெரியவர பலரும் அவரை அணுகினர். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பாடங்களுக்கு வினா விடை தொகுப்பு தயாரிக்க புத்தகங்கள், இணையத்தில் தேடியபோது நாமே ஏன் இதைப் புத்தகமாக வெளியிடலாமே என்ற கேள்வி எழுந்தது. அவரது எண்ணத்திற்கு கணவர், உறவினர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க இன்று கேரள மாநில கல்வித்துறையின் மகத்தான சாதனையாளராக வலம் வருகிறார் ஜவ்ஹறா மெஹர்.

ஆசிரியர் தகுதித் தேர்வு K-TET எழுதுவதற்கான துணைவன் - கைடு புக் வெளியிட்ட குறுகிய காலத்தில் அரசுப் பணிகளுக்கான தேர்வுகளில் கலந்துகொள்ள SET, NET, HSST, HSA, பாரா மெடிக்கல், மருந்து ஆய்வக உதவியாளர் தேர்வு உட்பட 18 தேர்வுகளுக்குத் தயாராக வினா விடை தொகுப்பு வெளியிட்டு சாதனை படைத்துள்ளார் மெஹர்.

இவரின் வினா விடை தயாரிப்புகளுக்குக் காப்புரிமை வழங்க பல பதிப்பகங்கள் முயற்சிக்க, தனது கணவர் உதவியுடன் One One Three Publication என்ற பதிப்பகத்தை நிறுவினார். இவரது புத்தகங்களுக்கு மாணவர்கள், பணியாளர் தேர்வாணைய தேர்வு எழுதுபவர்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பு கிடைக்க கடந்த இரண்டு ஆண்டுகளில் அனைத்துப் பாடங்களிலும் 40000 பிரதிகள் விற்பனையாகி இவரது பதிப்பகம் International Book Of Records சாதனை பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

ஜவ்ஹறாவின் அசாதாரண முயற்சிகளுக்கு அங்கீகாரமாக Indian Women Talent Award, Women Leadership Award, Indian Top 100 Author's Award உட்பட 2022ஆம் ஆண்டு மட்டும் பத்து விருதுகள் தேடி வந்தது. அடுத்ததாக சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுபவர்களுக்குப் பயன்படும் இயர் புக்கை தயாரித்து வருகிறார்.

**– குளச்சல் ஆசிம்**

Published by H. Abdur Raqeeb on behalf of Creative Communication Chennai, 138 Perambur High Road, Chennai -12.
Printed at Bharani Offset Printers, 77, Venkatathiri Street, Chennai - 12. Editor : H. Abdur Raqeeb.

# ST COURIER®
The People's Choice

ISO 9001 : 2015

## WE NOW ACCEPT
# TO PAY & COD
## BOOKINGS

"A NEW GATEWAY FOR YOUR BUSINESS"




An Affiliate Of WCA INTER GLOBAL

044-61266666

www.stcourier.com | helpdesk@stcourier.com | Follow Us On -

REGN NO : TN / CCN / 428 / 2021-2023 RNI NO : 33723/81
LICENCED TO POST WITHOUT PREPAYMENT NO. TN/PMG(CCR)/WPP-450/21-23
Publication 1st & 16th of Every Month

SAMARASAM 16 - 31 MARCH 2023
POSTED AT EGMORE RMS / 1 PATRIKA CHANNEL
Posted Between 16 - 18 MARCH 2023

BRINGING HELP and HOPE
SOCIETY FOR BRIGHT FUTURE

# Kapda Bank

VISION 2026®
Creating Partnership with the Needy




## HOW CAN YOU BECOME A PARTNER?

**Help us save the life and dignity of unprivileged by connecting them with donors:**

| | *Project Scope Contribution (INR)* |
|---|---|
| Two pair of clothes | ₹ 1000 |
| Support 10 Families | ₹ 10,000 |
| Support 10,000 Families | ₹ 1,00,00,000 |

SBF works for the welfare of such people through its Clothes Distribution Campaign, after disasters and natural calamities as well as in normal conditions. SBF provides clothes to people in underprivileged sections of the society, for both winters and summers to help them get through the harsh weather.

**PURIFY YOUR WEALTH**
**PAY ZAKAT**

## DEPOSIT YOUR CONTRIBUTION

Account Name:
**Society for Bright Future**

Bank
**Axis Bank (Jasola Vihar)**

Current A/C No.
**921020057992123**

IFSC Code
**UTIB0001148**

Scan to pay

PhonePe Paytm

*Donation to Society for Bright Future is eligible for exemption under section 80G of the Income Tax Act (email us the detail of the transaction with postal address) at accounts@sbfindia.org or WhatsApp 7290044603*

## SOCIETY for BRIGHT FUTURE

E-89, 1st floor, Hari Kothi Lane, Abul fazal Enclave, Jamia Nagar, New Delhi-110025
011 41500705, +91 7290074383
projects@sbfindia.org www.sbfindia.org

sbfparivar societyforbrightfuture